அல்லாஹ்வின் கட்டளை

وَاصْبِرْ نَفْسَكَ مَعَ الَّذِينَ يَدْعُونَ رَبَّهُمْ بِالْغَدَاةِ وَالْعَشِيِّ يُرِيدُونَ وَجْهَهُ ۖ وَلَا تَعْدُ عَيْنَاكَ عَنْهُمْ تُرِيدُ زِينَةَ الْحَيَاةِ الدُّنْيَا

பொருள்: தங்கள் இறைவனின் விருப்பத்தை நாடிக் காலையிலும், மாலையிலும் அவனை அழைக்கின்றவர்களுடன் நீர் சேர்ந்திருப்பீராக. நீர் இவ்வுலக வாழ்வின் அலங்காரத்தை விரும்பி உம் பார்வைகளை அவர்களை விட்டும் கடந்து செல்ல வேண்டாம். (18:29)

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 11

பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 43 & 44

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1448 - ஜமாதில் அவ்வல் 10 - 17

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 அகா 22 - 29 ★ 22 - 29 அக்டோபர் 2026

அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

நபிமொழி

திருக்குர்ஆன் போதனைகளை கற்பிக்கும் சபைகள்

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ مَا اجْتَمَعَ قَوْمٌ فِي بَيْتٍ مِنْ بُيُوتِ اللَّهِ، يَتْلُونَ كِتَابَ اللَّهِ، وَيَتَدَارَسُونَهُ بَيْنَهُمْ، إِلَّا نَزَلَتْ عَلَيْهِمُ السَّكِينَةُ، وَغَشِيَتْهُمُ الرَّحْمَةُ، وَحَفَّتْهُمُ الْمَلَائِكَةُ، وَذَكَرَهُمُ اللَّهُ فِيمَنْ عِنْدَهُ۔

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ்வின் இல்லங்களில் ஏதேனும் ஒன்றில் எந்த மக்கள் ஒன்றுகூடி, அல்லாஹ்வின் வேதத்தை ஓதி, அதனை பரஸ்பரம் கற்றுக் கொடுக்கின்றனரோ அவர்களின் மீது அமைதி இறங்குகின்றது. அவர்களை இறைவனின் கருணை சூழ்ந்து கொள்கிறது, மலக்குகள் அவர்களைச் சூழ்ந்து கொள்கின்றனர். மேலும், அல்லாஹ் தன்னிடத்தில் இருப்பவர்களிடம் அவர்களைப் பற்றி நினைவு கூர்கிறான்'.

(ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுத் திக்ர் வத் துஆ... ஹதீஸ் எண்: 2699)

* * * * * * * * * * * *

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

மார்க்க சபைகளில் ஈமானைப் பாதுகாப்பதும் உண்மையை உரைப்பதும்

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'எமது வழிமுறையோ இதுவாகும்; ஒரு நம்பிக்கையாளரின் வழிமுறையும் இதுவாகவே இருக்க வேண்டும்; அதாவது, பேசினால் முழுமையாக பேச வேண்டும். இல்லையெனில் அமைதியாக இருக்க வேண்டும்.

ஒரு சபையில் அல்லாஹ்வும், அவனது தூதரும் எள்ளி நகையாடப்படுவதைக் காணும்போது, நீங்கள் அக்கூட்டத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படாமல் இருக்கும் பொருட்டு, ஒன்று அங்கிருந்து சென்றுவிடுங்கள். அல்லது பின்னர் முழுமையாக தெளிவாக மறுப்புத் தெரிவித்து பதில் கொடுங்கள்.

இரண்டு வழிகள்தான் உள்ளன. ஒன்று பதில் அளிப்பது அல்லது மௌனமாக இருப்பது. (அந்த) சபையிலேயே அமர்ந்து கொண்டு (அவர்கள் சொல்வதற்கு) தலையாட்டிக் கொண்டிருப்பது என்ற மூன்றாவது வழிமுறையானது நயவஞ்சகம் ஆகும். மெல்லிய குரலில் மறைமுகமாக தனது கொள்கையை வெளிப்படுத்துவது'.

(மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 449, பத்ர், மார்ச் 12, 1908)

* * * * * * * * * * * *

தஃப்ஸீரே கபீர்

மார்க்க சபைகளின் முக்கியத்துவம்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : 'சில நண்பர்கள் இருக்கின்றனர் - அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்றனர். அவர்கள் எத்தகைய மக்களாக இருக்கின்றனர் என்றால், அவர்களுக்கு புரிய வைக்கப்பட்டபோதிலும் (மார்க்க) சபையை விட்டு (இடையில்) எழுந்து சென்று விடுகின்றனர். மேலும் வெளியில் சுற்றித் திரிகின்றனர். ஒவ்வொரு ஜமாஅத்திலும் சில பகட்டான உறுப்பினர்களும் இருப்பர் என்பதில் எந்த ஐயமுமில்லை. மேலும் சபையில் தமது (வருகையைக்) காட்டிவிட்டு இடத்தை காலி செய்து சென்று விடுகின்றனர். அத்தகைய பகட்டான நபர்கள் ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் காலத்திலும் இருந்து வந்தனர் என்று திருக்குர்ஆனிலும் வருகிறது. கூட்டம் நடத்தப்படும்போது அவர்களும் வந்து விடுவர். உரையாடல் துவங்குவதற்கு முன் அனைவரையும் பார்க்கின்றனர். ஸஹாபிகள் அவர்களை காண்பர். ஆனால், பணி தொடங்கிவிடும்போது அவர்கள் பார்வையிலிருந்து நழுவி தப்பிச் சென்று விடுகின்றனர். அத்தகைய நபர்களைக் குறித்து قَدْ يَعْلَمُ اللّٰهُ الَّذِيْنَ يَتَسَلَّلُوْنَ مِنْكُمْ لِوَاذًا என்று அல்லாஹ் கூறுகின்றான். பொருள்: உங்களுள் மறைவாக நழுவி விடுபவர்களை நிச்சயமாக அல்லாஹ் அறிகின்றான். (24:64) இத்தகைய பகட்டான நபர்கள் இங்கும் இருப்பர். ஆனால், பல மக்கள் எத்தகையவர்களாக உள்ளனர் என்றால், அவர்கள் இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை அறிவதில்லை. மேலும், தங்களின் இந்த செயல் எத்தகையது? என்பதை அவர்கள் அறிவதில்லை.

ஹதீஸில் வருகிறது: ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது அன்னார் (ஸல்) இவ்வாறு கூறினார்கள்: என்னிடம் அல்லாஹ் இதனை கூறியுள்ளான். அதாவது இந்தக் கூட்டத்திற்கு ஒரு நபர் வந்தார். மேலும், கூட்டம் நிறைந்திருப்பதை அவர் கண்டார்; அவரை மிகவும் அரிதாகவே சப்தம் சென்றடைந்தது. ஆனால், இங்கு இறைவனைப் பற்றி பேச்சுகள் பேசப்படுகின்றன ; எனவே இங்கிருந்து செல்லக் கூடாது என்று அவர் எண்ணினார். எனவே வெட்கத்துடன் அமர்ந்து விட்டார். அப்போது, நானும் இவரது பாவங்கள் குறித்து வெட்கப்படுவேன் ; மேலும், அவரை நான் பிடிக்க மாட்டேன் என்று இறைவன் கூறினான்

பின்னர் மற்றொருவர் சபைக்கு வந்தார். (அவர் வந்தபோது) சபையில் அமர்வதற்கு இடமில்லை என்பதை அவர் கண்டார். ஆனால், அங்கும், இங்கும் தேடி சப்தம் கேட்க முடிந்த ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டார். அப்போது இறைவன் கூறினான்: எப்படி இந்த நபர் இங்கும் அங்கும் தேடி முன்னேறினாரோ அதே போன்று நானும், இவரை எனக்கு அருகில் இடமளிப்பேன். அடுத்து, மூன்றாவதாக ஒரு நபர் குறித்து அல்லாஹ் செய்தி வழங்கினான். அவர் வந்தார். ஆனால், சப்தம் வந்தடையவில்லை என்பதைக் கண்டு அவர் திரும்பிச் சென்று விட்டார். அப்போது அல்லாஹ் கூறினான்: எப்படி இந்த நபர் திக்ரே இலாஹி நடைபெறும் சபையிலிருந்து திரும்பிச் சென்று விட்டாரோ அதே போன்று, நானும் இவரிடமிருந்து முகம் திருப்பிக் கொள்வேன். மேலும் கருணையின் வாசல்களை அவருக்கு திறக்கமாட்டேன். (ஃபஸாயிலுல் குர்ஆன், பக்கம் 264 முதல் 265 வரை)

* * * * * * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள்

2026 -ம் ஆண்டு பிரிட்டன் ஜல்ஸா ஸாலானாவின் இரண்டாம் நாள் ஆற்றிய உரையின் சுருக்கம்

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தஷஹ்ஹுத் தவுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு கூறினார்கள்: தற்போது நான் நடப்பு ஆண்டில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு கிடைத்த அல்லாஹ்வின் அருட்களின் சுருக்கமான வடிவத்தை எடுத்துரைப்பேன்.

புதிதாக உருவாகிய ஜமாஅத் கிளைகள்

இந்த ஆண்டு உலகம் முழுவதும் பாகிஸ்தானைத் தவிர புதிதாக நிறுவப்பட்ட ஜமாஅத்துகளின் எண்ணிக்கை 398 ஆகும். இந்த புதிய ஜமாஅத்துகள் மட்டுமின்றி, 811 இடங்களில் முதன்முறையாக அஹ்மதிய்யத்தின் செடி நடப்பட்டுள்ளது. பெனின் நாட்டில் இந்த ஆண்டு 86 புதிய ஜமாஅத்துகள் நிறுவப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து காங்கோ பிராசாவீல், பின்னர் லைபீரியா மற்றும் மற்ற நாடுகள் உள்ளன.

புதிய மஸ்ஜிதுகள் நிறுவுதல்

இதேபோன்று நடப்பு ஆண்டில் கட்டப்பட்டுள்ள அல்லது ஜமாஅத்திற்கு கிடைத்த மஸ்ஜிதுகள் இருக்கின்றன. இவற்றின் ஒட்டு மொத்த எண்ணிக்கை 272 ஆகும். இதில் 133 புதிய மஸ்ஜிதுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 39 ஏற்கனவே கட்டப்பட்ட மஸ்ஜிதுகள் ஜமாத்திற்கு கிடைத்துள்ளன.

மிஷன் ஹவுஸ்கள் மற்றும் தப்லீஃக் மையங்கள்

அல்லாஹ்வின் அருளால், நடப்பு ஆண்டில் 41 நாடுகளில் மிஷன் ஹவுஸ்களின் எண்ணிக்கை 127 ஆக அதிகரித்துள்ளது. இதில் கென்யா முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து கானா மற்றும் இந்தோனேஷியா இரண்டாவது இடத்தில் உள்ளது. மூன்றாவது இடத்தில் நைஜர் உள்ளது. வகாரே அமல் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் இந்த ஆண்டு ஜமாத்திற்கு மூன்று மில்லியன் அமெரிக்க டாலர்கள் நிதி மிச்சமாகியுள்ளது.

பிரசுரம் மற்றும் அச்சுத் துறை

பிரசுரத் துறையின் அறிக்கையின்படி, இந்த ஆண்டு 37 மொழிகளில் 353 பல்வேறு புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள், கையேடுகள் போன்றவைகள் 16 இலட்சத்து 89 ஆயிரத்திற்கும் அதிகமான எண்ணிக்கையில் அச்சிடப்பட்டுள்ளன.

திருக்குர்ஆனின் விளக்கவுரைகளில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விளக்கவுரை முன்னர் உருது மொழியில் 8 தொகுதிகளில் வெளியாகியுள்ளது. அதன் முழுமையான அரபு மொழிபெயர்ப்பு முதன்முறையாக வெளியிடப்பட்டுள்ளது. அதேபோன்று ஆங்கில விளக்கவுரையான 'ஃபைவ் வால்யூம் கமென்டரி'யும் வெளியாகியுள்ளது.அதன் முதல் தொகுதியின் அரபு மொழிபெயர்ப்பு அச்சில் உள்ளது.

ஹதீஸ்களைப் பொறுத்தவரை, ஹஸ்ரத் ஸய்யிது ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷா ஸாஹிப் அவர்களின் ஸஹீஹ் புஹாரியின் விளக்கவுரையின் முதல் தொகுதியின் ஆங்கில மொழிபெயர்ப்பு மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாவது தொகுதியின் ஆங்கில மொழிபெயர்ப்பு முதன்முறையாக வெளியிடப்பட்டுள்ளது. இது அறிவின் மாபெரும் பொக்கிஷமாகும்; அன்பர்கள் இதலிருந்து பலன் பெற வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களின் மொழிபெயர்ப்புகளில், 45 நூல்கள் 18 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் 11 நூல்கள் 6 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் 'தமீரே பைத்துல்லாஹ் கே 23 அஸீமுஷ்ஷான் மகாஸித்' என்ற நூலின் அரபு மொழிபெயர்ப்பு முதன்முறையாக வெளியிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் 'Christianity-A Journey from Facts to Fiction' என்ற நூல் பல்கேரியன் மொழியிலும், 'An Elementary Study of Islam' என்ற நூல் டேனிஷ் மொழியில் முதன்முறையாக வெளியிடப்பட்டுள்ளன.

இதேபோன்று பல்வேறு சந்தர்ப்பங்களில் நான் அளித்த கேள்விகளுக்கான பதில்களும் நூல் வடிவில் வெளியாகியுள்ளன. மேலும், ஆங்கில மொழியிலும் வெளியிடப்பட்டுள்ளன. இதேபோன்று, வேறு சில உரைகள் இருக்கின்றன. அவற்றையும் பிரெஞ்சு, அரபு, ஜெர்மன், இந்தோனேஷியா உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

நஸாரத் நஷ்ரோ இஷாத் காதியான்

நஷ்ரோ இஷாத் காதியான் இதுவரை இந்தியாவின் 14 உள்ளூர் மொழிகளில் திருக்குர்ஆனின் மொழிபெயர்ப்பை வெளியிட்டுள்ளது. அல்லாஹ்வின் அருளால், இந்த முறை காதியானிலிருந்து 'தவ்ஹீத் நஸ்தாலீக்' என்ற திருக்குர்ஆன் எழுத்துரு (Font) தயாரிக்கப்பட்டுள்ளது; இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சார்பாக தயாரிக்கப்பட்ட முதல் நஸ்தாலீக் எழுத்துருவாகும். தஃப்ஸீர் ஸகீரின் அரபு உரை 'கத்தே மன்ஸூர்' எழுத்துருவிலும், உருது உரை இந்த புதிய எழுத்துருவிலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களும் இந்தியாவின் பிராந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

வகாலாத் தஸ்னீஃப் யூகே

வகாலாத் தஸ்னீஃப், யூகே ஒரு புதிய மொழியான லித்யோபியன் மொழியில் திருக்குர்ஆனை மொழியாக்கத்தை அச்சிட்டுள்ளது. தற்போது அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்ட திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை 79ஆக உயர்ந்துள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களான நஜ்முல் ஹுதா, குத்பா இல்ஹாமியா, கராமத்துஸ் ஸாதிகீன் மற்றும் மல்ஃபூஸாத் தொகுதி 5 ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு அச்சிடப்பட்டுள்ளன. 'பராஹீனே அஹ்மதிய்யா' நான்கு பாகங்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒரே தொகுதியில் அச்சிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் நூல்களான இன்கிலாப் ஹக்கிகீ, முதாலிபாதே தஹ்ரீகே ஜதீத், இர்ஃபானே இலாஹி மற்றும் வாகிஆத்தே கிலாஃபத்தே அலவி ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளியாகியுள்ளன.

ஜமாஅத்துகளில் பிராந்திய மற்றும் மத்திய நூலகங்கள் நிறுவுதல்

உலகின் 108 நாடுகளில் இதுவரை 733 நூலகங்கள் நிறுவப்பட்டு விட்டன.

வகாலாத் இஷாஅத்தே தர்ஸீல்

உலகம் முழுவதும் 22 மொழிகளில் 116 பத்திரிகைகளும் செய்தித்தாள்களும் வெளியாகி வருகின்றன.

கண்காட்சிகளின் அமைப்பு

உலகளவில் 3,688 கண்காட்சிகள் மூலம் 10 லட்சத்து ஏழாயிரத்திற்கும் நபர்கள் வரை இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது.

ரகீம் பிரஸ்

ரகீம் பிரஸ் மூலமாக வெளியிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து ஐம்பத்தி ஏழாயிரத்து இருநூற்றி நாற்பத்தி ஏழாகும். ரகீம் பிரஸ் அல்லாஹ்வின் அருளால் இங்கு அதிகமான பணியைச் செய்து கொண்டிருக்கிறது. ஆஃப்ரிக்காவின் ஏழு நாடுகளில் நமது அச்சகங்கள் உள்ளன, அங்கு ஏழு லட்சத்து அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களும், 82 லட்சத்திற்கும் அதிகமான நாளிதழ்களும், பத்திரிகைகள் மற்றும் தப்லீஃக் மற்றும் தர்பிய்யத் நூல்களும் வெளியாகியுள்ளன.

வகாலத்தே தஃமீல் வ தன்ஃபீஸ் இந்தியாவின் அறிக்கையின்படி, ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இல்ல வளாகத்தில் சர்வவல்லமையுள்ள இறைவனின் இருப்பு குறித்த 'அல் முஜீப்' என்ற கண்காட்சி தயார் செய்யப்பட்டுள்ளது. காதியானில் தலைமையக ஆராய்ச்சிப் பிரிவு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

அரபிக் டெஸ்க் மூலம் வெளியிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை இப்போது 200-ஐ எட்டி விட்டது. அவற்றுள் ரூஹானி கஸாயீன் உடைய அனைத்து உருது நூல்கள், மல்ஃபூஸாத்தின் முழுமையான தொகுப்புகள், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் தஃப்ஸீரே கபீரின் பத்து தொகுதிகளைக் கொண்ட தொகுப்புகள் மற்றும் 34 இதர புத்தகங்களின் மொழிபெயர்ப்புகளும் அடங்கும். நடப்பு ஆண்டின் போது, மஜ்மூஆ இஷ்திஹாரத்தின் மூன்று தொகுப்புகளும், தஆவத்துல் அமீரின் அரபு மொழிபெயர்ப்பும் மற்றும் பிற சில மொழிபெயர்ப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன. வங்காளத்தின் டெஸ்க் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் 6 புத்தகங்களின் மொழிபெயர்ப்புகள் அச்சிடப்பட்டுள்ளன. எனது உரைகளையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

ஃபிரெஞ்சு டெஸ்க் 'லெக்சர் லாகூர் எனும் நூலின் பிரெஞ்சு மொழியாக்கத்தை வெளியிட்டுள்ளது.

துருக்கியிலும் சில மொழிபெயர்ப்புப் பணிகள் நடந்து வருகின்றன. ஸ்பானிஷ் டெஸ்க் நடப்பு ஆண்டு ஆறு புத்தகங்களின் மொழிபெயர்ப்புகளை நிறைவு செய்துள்ளனர். சீன டெஸ்க் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் 1924-ம் ஆண்டு மார்க்க மாநாட்டின் லெக்சரின் மொழியாக்கத்தை வெளியிட்டுள்ளது.

துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளம்பரத் தாள்களின் விநியோகம்

இந்த ஆண்டு 120 நாடுகளில் மொத்தம் 78 லட்சத்து 66 ஆயிரத்திற்கும் மேற்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இதன் மூலம் 3 கோடியே 92 லட்சத்திற்கும் அதிகமான நபர்கள் வரை தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டுள்ளது.

வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்த சிறுவர்களின் எண்ணிக்கை 50,981 ஆகும். மேலும் சிறுமிகளின் எண்ணிக்கை 36,686 ஆகும். இந்த ஆண்டு 74 நாடுகளைச் சேர்ந்த 3,116 பெற்றோர் தங்களுக்கு பிறக்க இருக்கும் குழந்தைகளை வக்ஃப் நவ் திட்டத்தின் கீழ் இணைத்துள்ளனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொடங்கிய 'ரிவ்யூ

இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம்....

ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து தவக்குல் அலல்லாஹ் தொடர்பான ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04 செப்டம்பர் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **தபூக்** மாதம் **04 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ் ஒரு முழுமையான மனிதராக ஆக்கி, ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் ஓர் அழகிய முன்மாதிரியாகத் திகழச் செய்தபோது, அனைத்து நற்பண்புகளையும் அன்னாரிடம் தோற்றுவித்து, அதனை மகத்தான நல்லொழுக்கமாக ஆக்கினான். மேலும், நீங்கள் உங்களுக்குள் நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள விரும்புகிறீர்கள் என்றால், நல்லொழுக்கத்தின் உயரிய தரங்களை அடைய விரும்புகிறீர்கள் என்றால், இந்த மகத்தான தூதரைப் பின்பற்றுங்கள்; இதுவே நீங்கள் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்கான வழியாக அமையும் என்று அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம் அறிவுறுத்தினான். அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க ஹஸ்ரத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நற்பண்பையும் அதன் உச்சக்கட்டத்திற்கு கொண்டு சேர்த்த அதே வேளையில், இத்தகைய உயரிய தரங்களை அடைய முயற்சி செய்யுமாறு நம்பிக்கையாளர்களுக்கும் அறிவுறுத்தினார்கள்.

தற்காலத்தில் அன்னாருடைய வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் எடுத்துரைக்கப்பட்டு வருகிறது; இதன் தொடர்ச்சியாக, இன்று அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தல் தொடர்பாக அன்னாருடைய வாழ்வின் பல்வேறு அம்சங்கள், அன்னாருடைய அந்தஸ்து, நம்பிக்கையாளர்களுக்கு அன்னார் (ஸல்) வழங்கிய அறிவுரைகள் மற்றும் அன்னாருடைய நடைமுறைச் செயல்கள் குறித்து நான் எடுத்துரைப்பேன்.

இறைவன் மீது நம்பிக்கை வைப்பது குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் எடுத்துரைத்துள்ளான். ஓர் இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

அதாவது, நபியே! நிச்சயமாக நாம் உம்மை எவ்வாறான நிலையில் அனுப்பியுள்ளோம் என்றால், நீர் உலகிற்கு கண்காணிப்பாளராகவும் இருக்கிறீர்; நம்பிக்கையாளர்களுக்கு நற்செய்தி அறிவிப்பவராகவும், நிராகரிப்பாளர்களுக்கு அச்சமூட்டி எச்சரிப்பவராகவும் இருக்கிறீர். மேலும், அல்லாஹ்வின் கட்டளையுடன் அவன்பால் அழைப்பவராகவும், பிரகாசிக்கும் சூரியனாகவும் அனுப்பி வைத்துள்ளோம். மேலும், நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து மிகப்பெரிய அருள் கிடைக்கும் என்று நற்செய்தி அறிவிப்பீராக! நிராகரிப்பாளர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் நீர் ஒருபோதும் கீழ்ப்படிய வேண்டாம்; அவர்களின் துன்புறுத்தல்களைப் பொருட்படுத்தாது புறக்கணித்து விடுவீராக! அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பீராக! பொறுப்பேற்றுச் செயல்படுத்துவதில் அல்லாஹ்வே போதுமானவன் ஆவான்.

எனவே, இது அன்னாருக்கு நற்செய்தியாக இருப்பது போல் நம்பிக்கையாளர்களுக்கும் ஒரு நற்செய்தியாக உள்ளது. அவர்கள் ஈமானில் உறுதியாக இருந்து, அல்லாஹ்வின் கட்டளைகளைச் செயல்படுத்துவதோடு, அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கையும் வைத்திருப்பார்களேயானால், அல்லாஹ் அவர்களின் ஒவ்வொரு சிரமத்திற்கும் போதுமானவனாக இருப்பான்.

பிறகு, நம்பிக்கையாளர்களுக்கு கவனமூட்டியவாறு, அல்லாஹ் கூறுகிறான். அதாவது, அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை; எனவே, நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும்.

எனவே, நாம் அல்லாஹ்வை வணங்குவதன் உரிமையைச் சரியாக நிறைவேற்றுவோம் என்றால், அல்லாஹ் மீது நம்பிக்கை வைப்போம் என்றால், பிறகு அடையாளங்களையும் காண்போம். இதற்கான மிக உயரிய முன்மாதிரியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நாம் காண்கிறோம். அன்னாருடைய அருளினால் அன்னாருடைய ஸஹாபிகளும் இதிலிருந்து பயனடைந்தார்கள். மேலும், நமக்கு முன்னால் முன்மாதிரிகளைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் (வரலாற்று) நிகழ்வுகளைப் பார்க்கும்போது, அன்னார் (ஸல்) மிக உயர்ந்த அளவிலான ஒரே எண்ணம் கொண்டவராகவும், தூய உள்ளம் கொண்டவராகவும், இறைவனுக்காக உயிரைத் தியாகம் செய்பவராகவும், படைப்பினங்கள் மீது அச்சமும், எதிர்பார்ப்பும் கொள்வதிலிருந்து முற்றிலும் முகத்தைத் திருப்பியவராகவும், இறைவன் மீது மட்டுமே முழு நம்பிக்கை வைப்பவராகவும் இருந்தார்கள் என்பது மிகவும் தெளிவாகவும், வெளிப்படையாகவும், பிரகாசமாகவும் விளங்குகிறது. அனைத்து நபிமார்களின் சம்பவங்களில் அபாயகரமான கட்டங்கள் அதாவது இத்தகைய அபாயகரமான சந்தர்ப்பங்களும், அல்லது சூழ்நிலைகளும் வந்தபோதிலும், இறைவன் மீது இவ்வாறு முழுமையான நம்பிக்கை கொண்டு, பகிரங்கமாக இணைவைப்பையும், படைப்பினங்களை வணங்குவதையும் தடுக்கக் கூடியவர், இத்தனை எதிரிகள் சூழ்ந்திருந்த நிலையிலும் உறுதியோடும் நிலைப்பாட்டோடும் நின்ற எந்தவொருவரைப் பற்றியும் நிரூபணம் ஆகவில்லை. (பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 4, ரூஹானீ கஸாயின், தொகுதி 1, பக்கம் 111 - 112)

பிறகு அன்னார் (அலை) கூறுகிறார்கள்: நபிமார்களின் அந்தஸ்தும் மிகப்பெரியது என்பதில் சந்தேகமில்லை; ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைநம்பிக்கை எனும் முன்மாதிரிக்கு நிகரான உதாரணங்கள் அங்கேயும் காணக் கிடைப்பதில்லை.

பிறகு அன்னார் (அலை) கூறுகிறார்கள்: 'தவக்குல் அதாவது இறைவனிடம் உள்ளத்தைப் பிணைத்துக் கொள்வதும், உலகத்தை விட்டுவிலகுவதுக்குமான நடைமுறைச் சான்றாக நமது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விளங்குகிறார்கள். அன்னாருக்கு எவருடைய புகழ்ச்சியைப் பற்றியோ அல்லது எவருடைய தப்பெண்ணத்தைப் பற்றியோ கவலை இருந்ததில்லை; அதாவது, எவரது பாராட்டைப் பற்றியோ அல்லது எவரேனும் இழிவாகப் பேசுவதைப் பற்றியோ அன்னாருக்கு எந்தக் கவலையும் இருக்கவில்லை. அன்னாருக்கு எத்தனையோ துன்பங்கள் நேரிட்டன; ஆனால், அன்னார் (ஸல்) எதையும் பொருட்படுத்தவில்லை. இறைவன் தரப்பிலிருந்து எந்தப் பணிக்காக அன்னார் (ஸல்) வந்தார்களோ, அந்தப் பணியை நிறைவேற்றுவதிலிருந்து எந்தவொரு பேராசையும், சுயநலமும் அன்னாரைத் தடுக்க முடியவில்லை. மனிதன் இந்த நிலையைத் தனக்குள் கண்டுணர்ந்து, சோதனையில் வெற்றி பெறாத வரை ஒருபோதும் கவலையற்றவனாக இருக்கக் கூடாது.'

இத்தகைய அந்தஸ்தைப் பெற

முயற்சி செய்ய வேண்டும் என்று அன்னார் அறிவுறுத்தினார்கள். நீங்கள் இந்த அந்தஸ்தை அடைய முயற்சி செய்ய வேண்டும்; கவலையற்று இருக்கக் கூடாது; அல்லாஹ்வை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைக்கும் இந்த உயரிய அந்தஸ்தை அடைய வேண்டும்.

பிறகு, அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

'மேலும், நினைவில் கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால், எவர் 'முதபத்துல் ஆக (அதாவது, இறைவன்பால் மனதை திருப்பியவராக) இருக்கிறாரோ, அவரே 'முத்தவக்கிலாகவும்' (இறைவனை முழுமையாக நம்பியவராகவும்) இருப்பார். அதாவது இறைவனை முழுமையாக நம்பியவராக ஆகுவதற்கு இறைவன்பால் மனதை திருப்பியவராக மாறுவது நிபந்தனையாகும். அதாவது, நீங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்வதற்கு இறைவன் பக்கம் சாய்வது அவசியமாகும். ஏனெனில், மற்றவர்களுடனான தொடர்புகள் அவர்கள் மீது நம்பிக்கையும் சார்பும் வைக்கும் வகையில் இருக்கும் வரை, அல்லாஹ்வின் மீது தூய நம்பிக்கை எவ்வாறு ஏற்பட முடியும்? மனிதன் இறைவனை நோக்கித் திரும்பும்போது, அவன் உலகத்துடனான பிணைப்பை துண்டித்துக் கொண்டு இறைவனுடன் தன்னை இணைத்துக் கொள்கிறான். இது முழுமையான நம்பிக்கை ஏற்படும்போது மட்டுமே சாத்தியமாகும்.

உதாரணமாக, நமது கண்ணியத்தியற்குரிய நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு முழுமையான முறையில் இறைவனுடன் உள்ளத்தை இணைத்துக் கொண்டவர்களாக இருந்தார்களோ, அதேபோன்று முழுமையான முறையில் இறைவன் மீது நம்பிக்கை வைப்பவர்களாகவும் இருந்தார்கள். இதன் காரணமாகவே, அவ்வளவு செல்வாக்கு மிக்கவர்களையும், குல மற்றும் கோத்திர தலைவர்களையும் அன்னார் (ஸல்) சிறிதும் பொருட்படுத்தவில்லை; அவர்களின் எதிர்ப்பினால் அன்னார் (ஸல்) சிறிதும் பாதிக்கப்படவுமில்லை. இறைவன் மீது அன்னாருக்கு அசாதாரண நம்பிக்கை இருந்தது; இதனால்தான் அன்னார் (ஸல்) இவ்வளவு மகத்தான சுமையைச் சுமந்தார்கள். முழு உலகின் எதிர்ப்பையும் எதிர்கொண்டார்கள். அவற்றின் இருப்பை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. இது நம்பிக்கையின் மாபெரும் முன்மாதிரி ஆகும். உலகத்தில் இதற்கு நிகரான முன்மாதிரியை காண முடியாது. ஏனெனில், இதில் இறைவனைத் தேர்ந்தெடுத்து உலகத்தையே எதிரியாக மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், இறைவனைக் காண்பது போன்ற நிலை ஏற்படாத வரை, இதற்குப் பிறகு மற்றொரு கதவு திறக்கப்போகிறது என்ற நம்பிக்கை ஏற்படாத வரை இந்த நிலை உருவாகாது. இந்த நம்பிக்கையும், உறுதியும் ஏற்பட்டுவிடும்போது, அவர் இறை வழியில் தமது உற்றாரையும் உறவினரையும் கூட எதிரியாக்கிக் கொள்கிறார். ஏனெனில், இறைவன் வேறு (நல்ல) நண்பர்களைத் தருவான் என்பதை அவர் அறிகிறார். அவருக்கு இதைவிடச் சிறந்தது கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதால், அவர் தமது சொத்துக்களையும் இழக்கத் துணிகிறார்.'

சுருக்கமாகக் கூறுவதென்றால், இறை விருப்பத்திற்கு முன்னுரிமை அளிப்பதே இறைவனுடன் உள்ளத்தை இணைப்பதாகும். மேலும் இறைவனுடன் உள்ளத்தை இணைப்பதும், இறைவன் மீது நம்பிக்கை வைப்பதும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகும்; அதாவது ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டவை. இறைவனுடன் உள்ளத்தை இணைப்பதன் இரகசியமே இறைவன் மீது நம்பிக்கை வைப்பது ஆகும். இறைவன் மீது நம்பிக்கை வைப்பதன் நிபந்தனையே இறைவனுடன் உள்ளத்தை இணைப்பது ஆகும். இந்த விஷயத்தில் இதுவே நமது மார்க்க நிலைப்பாடு ஆகும். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 302, 2022-ம் ஆண்டு பதிப்பு)

நாம் அல்லாஹ்வின் மீது முழுமையாகச் சாய்ந்து, உலகத்தின் மீதான சார்பை முடிவுக்குக் கொண்டுவரும் போதுதான் உண்மையான இறை நம்பிக்கையின் நிலை உருவாகும். நான் ஏற்கனவே கூறியது போல், நாம் அனைவரும் அறிந்ததுபோல், இதற்கான மிக உயர்ந்த முன்மாதிரியாக நமது தலைவரும் வழிகாட்டியுமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் திகழ்கிறார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

'அல்லாஹ்வை பலவீனமானவன் என்று எண்ணிவிடாதீர்கள்; அவன் பெரும் ஆற்றல் மிக்கவன். ஏதேனும் ஒரு விஷயத்தில் நீங்கள் அவன் மீது நம்பிக்கை வைத்தால் அவன் நிச்சயமாக உங்களுக்கு உதவி செய்வான்.

(அதாவது,) எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறாரோ, அவருக்கு அல்லாஹ்வே போதுமானவன்.

ஆனால், இந்த வசனங்கள் முதலில் யாரை விளித்து பேசியதோ அவர்கள் மார்க்கவாதிகளாக இருந்தார்கள். அவர்களின் அனைத்து சிந்தனையும் மார்க்க விஷயங்களுக்காக மட்டுமே இருந்தன; அவர்களின் உலக விஷயங்கள் இறைவனின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன. எனவே, 'நான் உங்களுடன் இருக்கிறேன்' என்று கூறி அல்லாஹ் அவர்களுக்கு ஆறுதல் அளித்தான். சுருக்கமாகச் சொன்னால், இறையச்சத்தின் அருள்களில் ஒன்று என்னவென்றால், இறையச்சமுடையோருக்கு மார்க்கக் விஷயங்களைத் தவிர்த்து நேரிடும் துன்பங்களிலிருந்து அல்லாஹ் விடுதலையளிக்கிறான். அதேபோன்று, இறையச்சமுடையோருக்கு அல்லாஹ் சிறப்பான முறையில் ரிஸ்க் வழங்குகிறான். இங்கே நான் இறைவனைப் பற்றிய ஞானம் எனும் ரிஸ்க்கைப் பற்றிக் குறிப்பிடுகிறேன்.'

அன்னார் (ஸல்) பௌதிக ரிஸ்க்கைப் பற்றிக் குறிப்பிடாமல், இறைவனைப் பற்றிய ஞானத்தைக் குறிப்பிடும் ரிஸ்க்கைப் பற்றிக் கூறுகிறார்கள்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

'ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவராக இருந்தபோதிலும் வேதக்காரர்கள், தத்துவஞானிகள், உயரிய கல்வி ஞானம் கொண்டவர்கள் மற்றும் அறிஞர்கள் நிறைந்த ஒட்டுமொத்த உலகத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆயினும், அன்னாருக்கு ஆன்மிக ரிஸ்க் எந்த அளவு அதிகமாக வழங்கப்பட்டதென்றால், அன்னார் (ஸல்) அனைவரையும் மிகைத்து அவர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டினார்கள். அது, ஈடு இணையற்ற ஆன்மிக ரிஸ்க் ஆக இருந்தது.' (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 11, 2022-ம் ஆண்டு பதிப்பு)

இது குறித்து ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நீங்கள் அல்லாஹ்வை எவ்வாறு நம்ப வேண்டுமோ, அந்த அளவுக்கு அவன் மீது நம்பிக்கை வைத்தீர்களேயானால், பறவைகளுக்கு ரிஸ்க் வழங்கப்படுவதைப் போல் நிச்சயமாக உங்களுக்கும் வழங்கப்படும்.'

இங்கே பௌதிக ரிஸ்கைப் பற்றியும் அன்னார் (ஸல்) கூறியுள்ளார்கள்; அதாவது, 'அவை காலையில் வெறும் வயிற்றுடன் புறப்பட்டு, மாலையில் வயிறு நிறைந்தவையாகத் திரும்புகின்றன.' (ஸுனன் திர்மிதி, அப்வாபுஸ் ஸுஹது, ஹதீஸ் எண்: 2344)

ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்;

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உலகத்தில் பற்று இல்லாமல் இருப்பது என்பது (ஹலால் எனும்) அனுமதிக்கப்பட்டதை (ஹராம் எனும்) தடுக்கப்பட்டதாக ஆக்கிக் கொள்வதன்று. மேலும், எங்களுக்குச் செல்வத்தின் மீது எந்தப் பற்றும் இல்லை' என்று கூறி செல்வத்தை வீணடிப்பதும் அன்று. இன்றைய காலத்தில் சில பீர்மார்கள் மற்றும் ஃபகீர்மார்களின் வழிமுறையைப் போன்று எந்த விஷங்கள் ஆகுமானதாக உள்ளதோ அவற்றை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்று கூறுவதும் அன்று. **மாறாக, உலகத்தில் பற்று இல்லாமல் இருப்பது என்பது, உங்கள் இரு கரங்களிலும் இருக்கும் பொருளை விட அல்லாஹ்வின் கைவசம் உள்ளதன் மீது அதிக நம்பிக்கையைக் கொண்டிருப்பதாகும். இதுவே பற்றற்ற நிலையாகும்.**

அதாவது, நம்மிடம் உள்ள, நம்முடைய செல்வத்தை விட 'அல்லாஹ்விடம் இருப்பது அதிக பலனளிக்கும்' என்ற விஷயத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பதாகும். மேலும், துன்பத்திற்கான நற்கூலியைப் பொறுத்தவரை, உங்களுக்கு ஒரு துன்பம் நேரிடும்போது, (அதன் காரணமாகக் கிடைக்கும் நற்கூலியின் மீது நீங்கள் அதிக ஆசை கொண்டு) அந்தோ! 'அவை நமக்கு எஞ்சியிருக்க வேண்டுமே!'என்று நீங்கள் நினைப்பதாகும். (ஸுனன் திர்மிதி, அப்வாபுஸ் ஸுஹது, ஹதீஸ் எண்: 2340)

எனவே, 'தன்னிடம் இருக்கும்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

பொருளை விட, அல்லாஹ் எனது தேவையைப் பூர்த்தி செய்வான்; எனது சில பொருள்கள் வீணாகக் கூடும்; ஆனால் அல்லாஹ்விடம் இருப்பது ஒருபோதும் வீணாகாது' என்று உறுதியாக நம்புவதே இறைவன் மீதான நம்பிக்கை ஆகும். இறைவன் மீது நம்பிக்கை வைப்பவருக்கு, நற்செயல் புரிபவருக்கு தேவைக்கேற்ப வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஆதமின் மகனுடைய உள்ளத்திலிருந்து ஒவ்வொரு பள்ளத்தாக்கையும் நோக்கி ஒரு பாதை உள்ளது. எவருடைய உள்ளம் அந்த எல்லாப் பாதைகளையும் பின்பற்றுகிறதோ, அவனை எந்தப் பள்ளத்தாக்கில் வீழ்த்தி அழிப்பது என்பதைப் பற்றி அல்லாஹ் பொருட்படுத்துவதில்லை. ஆனால், எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பாரோ அவருக்கு பல்வேறு பாதைகளில் செல்வதில் அல்லாஹ்வே போதுமானவனாக இருப்பான்.' (ஸுனன் இப்னு மாஜா,கிதாபுஸ் ஸுஹது, ஹதீஸ் எண்: 4166)

இந்த ஹதீஸின் விளக்கவுரையில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இதன் பொருள் என்னவென்றால், எவர் தனது உள்ளத்தைப் பல்வேறு ஆசைகள், கவலைகள் மற்றும் உலகியல் துன்பங்களுக்குக் கீழ்ப்படியச் செய்வாரோ, எவரது கவனம் நாலாபுறமும் சிதறிக் கிடக்கிறதோ அப்படிப்பட்ட நபரைப் பற்றி அல்லாஹ் எந்தக் கவலையும் படமாட்டான். அவர் எந்தப் பள்ளத்தாக்கில் சென்று அழிகிறார், எங்கே வாழ்கிறார்; எங்கே மரணிக்கிறார் என்பதைப் பற்றி அல்லாஹ் பொருட்படுத்துவதில்லை. - அதாவது, எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறாரோ அவன் பக்கம் குனிகிறாரோ அவருடைய பல்வேறுபட்ட, சிதறுண்டு கிடக்கும் தேவைகள், கவலைகள் மற்றும் அவசியங்களுக்கு அல்லாஹ்வே பொறுப்பேற்று, அவற்றை நிறைவேற்றி வைக்கிறான்.

இந்தக் கருத்தை மற்றோர் அறிவிப்பும் உறுதிப்படுத்துகிறது; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'எவர் தனது அனைத்துக் கவலைகளையும் ஒரே கவலையாக - அதாவது மார்க்கத்தைப் பற்றிய கவலையாக ஆக்கிக் கொள்கிறாரோ - தனது மார்க்கம் என்ன நிலையில் உள்ளது? அல்லாஹ்வுடனான தொடர்பு எவ்வாறு உள்ளது? தனது ஆன்மிக நிலை எவ்வாறு உள்ளது? என்று பார்க்கிறாரோ - அவருடைய உலக மற்றும் மறுமை சார்ந்த மற்ற அனைத்துக் கவலைகளுக்கும் அல்லாஹ்வே போதுமானவனாக ஆகிவிடுகிறான்.' (மிர்காத்துல் மஃபாதீஹ், தொகுதி 9, பக்கம் 498, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001-ம் ஆண்டு பதிப்பு)

இதுவே இந்த ஹதீஸின் பொருளாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வளவு நுட்பமாக அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பதை மனதிற்கொண்டு, தமது அன்றாட விஷயங்களுக்காக துஆ செய்து வந்தார்கள் என்றால், ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது வீட்டிலிருந்து வெளியேறும்போது **இவ்வாறு கூறி வந்தார்கள்; அதன் மொழியாக்கத்தை நான் கூறுகிறேன்.**

'அல்லாஹ்வின் பெயரால், நான் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தேன். அல்லாஹ்வே! நாங்கள் வழுக்கி விழுவதிலிருந்தும், வழிதவறி போவதிலிருந்தும், அல்லது நாங்கள் அநீதி இழைப்பதிலிருந்தும், அல்லது எங்கள் மீது அநீதி இழைக்கப்படுவதிலிருந்தும், அல்லது நாங்கள் அறியாமையுடன் நடப்பதிலிருந்தும், அல்லது எங்களிடம் அறியாமையுடன் நடந்து கொள்ளப்படுவதிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறோம்.' (ஸுனன் திர்மிதி, அப்வாபுத் தஅவாத், ஹதீஸ் எண்: 3427)

இதேபோன்று மற்றோர் அறிவிப்பும் உள்ளது; ஹஸ்ரத் புரைதா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்;

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது வீட்டிலிருந்து வெளியே வரும்போது இவ்வாறு கூறுவார்கள்: 'அல்லாஹ்வின் பெயரால், நான் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தேன்; மேலும் அல்லாஹ்வின் அருளாலேயே நன்மை செய்வதற்கான ஆற்றலும், தீமையிலிருந்து தப்பிப்பதற்கான ஆற்றலும் கிடைக்கிறது. அல்லாஹ்வே! நான் வழிதவறிப்போவதை விட்டும், அல்லது நான் வழிகெடுக்கப்படுவதை விட்டும், நான் தடுமாற்றத்தில் சிக்குவதை விட்டும் அல்லது தடுமாற்றத்தில் நான் சிக்கவைக்கப்படுவதை விட்டும், நான் பிறர் மீது அநீதி இழைப்பதை விட்டும் அல்லது என் மீது அநீதி இழைக்கப்படுவதை விட்டும், நான் அறியாமையுடன் நடப்பதை விட்டும் அல்லது என்னிடம் அறியாமையுடன் நடந்து கொள்ளப்படுவதை விட்டும், நான் பிறர் மீது வரம்பு மீறுவதை விட்டும் அல்லது எனக்கு எதிராக வரம்பு மீறப்படுவதை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.' (கன்ஸுல் உம்மால், தொகுதி 7, பக்கம் 54, அறிவிப்பு எண்: 18416, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

(இந்த துஆவில்) அனைத்தும் அடங்கிவிட்டன; அனைத்தையும் இது உள்ளடக்கி விட்டது.

இதேபோன்று, வீட்டிற்குள் நுழையும் போது ஓதும் துஆவைப் பற்றிய குறிப்பும் காணக்கிடைக்கிறது.

ஹஸ்ரத் அபூ மாலிக் அஷ்அரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'ஒருவர் தமது வீட்டிற்குள் நுழையும் போது, 'அல்லாஹ்வே! வீட்டிற்குள் நுழைவதன் நன்மையையும், வீட்டிலிருந்து வெளியேறுவதன் நன்மையையும் உன்னிடம் வேண்டுகிறேன். அல்லாஹ்வின் பெயரால் நாங்கள் நுழைகிறோம்; அல்லாஹ்வின் பெயரால் நாங்கள் வெளியேறுகிறோம்; மேலும், எங்களது இறைவனாகிய அல்லாஹ்வின் மீதே நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம்' என்று கூற வேண்டும்.

பிறகு அவர் தனது குடும்பத்தினருக்கு ஸலாம் கூற வேண்டும்.' (ஸுனன் அபூ தாவூத், கிதாபுல் அதப் ஹதீஸ் எண்: 5096)

அதாவது, இந்த துஆவை ஓதிவிட்டு, பின்னர் வீட்டிற்குள் நுழைந்து குடும்பத்தினருக்கு ஸலாம் கூற வேண்டும்.

பிறகு, இறைவன் மீதான அன்னாருடைய நம்பிக்கை மற்றும் இறை அச்சம் பற்றிய ஓர் அறிவிப்பு வருகிறது.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களிடம் வருகை தந்தார்கள். அவர்களிடம் பேரீச்சம்பழாங்களின் ஒரு குவியலைக் கண்டு, பிலாலே! இது என்ன? என்று கேட்டார்கள். அதற்கு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், இவை தங்களுக்காக நான் சேமித்து வைத்துள்ள சில பேரீச்சம்பழாங்கள் என்று கூறினார்கள். அப்போது, பிலாலே! உம் மீது பரிதாபம்தான்! மறுமை நாளில் இதன் புகை நரகத்தில் எழும். அதாவது இது வேதனைக்குக் காரணமாகிவிடும் என்று நீர் அஞ்சவில்லையா? பிலாலே! செலவிடுவீராக; அர்ஷின் அதிபதியிடமிருந்து வறுமை வந்துவிடுமோ என்று அஞ்சாதீர்! அவன் மீது நம்பிக்கை வைப்பீராக என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.'

இது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

மனிதன் அல்லாஹ்வின் கட்டளைப்படி நடந்து, இறைவன் மீதான தனது நம்பிக்கையை நிலைநிறுத்தும் போதுதான் அவனது ஈமானில் முன்னேற்றம் ஏற்பட முடியும். ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களிடம் - அவர்கள் சில பேரீச்சம்பழாங்களைச் சேமித்து வைப்பதைக் கண்டார்கள். ஏன் இவ்வாறு செய்கிறீர்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு அவர்கள், நாளைக்காகச் சேமிக்கிறேன் என்றார்கள். அதற்கு அன்னார் (ஸல்), நாளைய இறைவனின் மீது உனக்கு ஈமான் இல்லையா? இன்று உமக்குக் கொடுக்கும் இறைவன் நாளை உமக்குத் தரமாட்டான் என்று உமக்கு நம்பிக்கை இல்லையா? என்று கேட்டார்கள்.'

ஆனால், வீண் விரையம் செய்து கொண்டே போக வேண்டும் என்பது இதன் பொருளல்ல என்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். சிலர் தாராளமாக செலவு செய்வார்கள்; ஆனால் அவர்கள் சேமிப்பதில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஆனால் இந்த அறிவுரையை அன்னார் (ஸல்) பிலால் அவர்களுக்குக் கூறினார்களே தவிர அனைவருக்கும் கூறவில்லை. ஒவ்வொருவருக்கும் அவரவர் சக்திக்கு ஏற்பவே அறிவுரையும் உபதேசமும் செய்யப்படுகிறது.' (மல்ஃபூஸாத், தொகுதி 9, பக்கம் 210, 2022-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இது நிச்சயமாக அறிவுரைதான்! ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி ஹதீஸில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது; அது என்னவென்றால், தங்களுக்காகவே நான் இதைச் சேமிக்கிறேன் என்று ஹஸ்ரத் பிலால் (ரலி) கூறியபோது, எனக்கு இறைவன் மீது நம்பிக்கை உள்ளது! இவை எனக்காகச்

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

சேமித்து வைக்கப்பட்டிருந்தால் இதன் புகை என்னை வந்தடையுமே என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஆனால், மற்ற மனிதர்களுக்கு திருக்குர்ஆனின் கட்டளைப்படி உள்ள அறிவுரை என்னவென்றால், ஒன்றும் இல்லாமல் போகும் அளவுக்கு வீண் விரையம் செய்யாதீர்கள்; வாழ்வாதாரப் பொருட்களுக்கான ஏற்பாடுகளையும் செய்யுங்கள். பிறகு, அந்தப் பொருட்களைப் பாதுகாப்பதற்கும், அவற்றிலிருந்து பயன் பெறுவதற்கும் நல்வாய்ப்பு வழங்கக் கோரி அல்லாஹ்வின் மீது நம்பிக்கையும் வையுங்கள்.

எனவே, இறைவன் மீது நம்பிக்கை வைப்பது என்பதன் பொருள் முன்னெச்சரிக்கையுடன் செயல்படாமலும், காரணிகளைப் பயன்படுத்தாமலும் இருப்பது என்பதல்ல! இது இஸ்லாமிய போதனைக்கு எதிரானதாகும்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருவர் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எனது ஒட்டகத்தின் முழங்காலைக் கட்டிப்போட்டுவிட்டு இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டுமா? அல்லது அதனைக் கட்டிப்போடாமல் விட்டுவிட்டு நம்பிக்கை கொள்ள வேண்டுமா? என்று கேட்டார். அதற்கு, அன்னார் (ஸல்) அதன் முழங்காலைக் கட்டிவிட்டு நம்பிக்கை வைக்க வேண்டும் என்று பதிலளித்தார்கள். (ஸுனன் திர்மிதி, அப்வாப் ஸஃப்ஃபத்துல் கியாமத், ஹதீஸ் எண்: 2517)

இது ஓர் எடுத்துக்காட்டாகும்; மற்ற விஷயங்களிலும் இந்த உதாரணத்தைப் பயன்படுத்தலாம். ஒரு கிராமவாசி - அல்லது மற்றோர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் அம்ர் பின் உமய்யா (ரலி) அவர்கள் - தமது ஒட்டகத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பள்ளிவாசலின் வாசலில் கட்டிப்போடாமல் விட்டுத் தொழுகைக்காக உள்ளே சென்றபோதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் என்று அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தக்ரீஜ் அஹாதீஸ் வ ஆஹாதீஸ் வ ஆஸார், பக்கம் 342, ஹதீஸ் 660)

இதன் விளக்கத்தை எடுத்துரைக்கும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: 'மனிதன் இறையச்சத்தைக் கைவிடாமல், இறைவன் மீது நம்பிக்கை வைத்திருந்தால், அவனுக்கு எந்தத் துன்பமும் நேரிடாது. இறைவன் மீது நம்பிக்கை வைப்பது என்பதன் பொருள், மனிதன் எவ்வித திட்டமிடலையும் செய்யாமல் இருக்க வேண்டும் என்பது அல்ல; மாறாக, திட்டமிடலை முழுமையாகச் செய்து முடித்த பிறகு, அதன் முடிவை இறைவனிடம் ஒப்படைப்பதாகும். இதற்கே நம்பிக்கை என்று பெயர். மனிதன் எந்தவொரு திட்டமிடலையும் செய்யாமல், வெறுமனே நம்பிக்கை மட்டும் வைத்தால், அவனது நம்பிக்கை போலியானதாகவும், வெற்று நம்பிக்கையாகவும் இருக்கும். இதேபோல், வெறும் திட்டமிடலை மட்டும் செய்துவிட்டு, நான் திட்டமிட்டு விட்டேன்; இதுவே போதுமானது. இனி அல்லாஹ்வை நம்ப வேண்டிய அவசியமில்லை என்று நினைத்தால், இறைவன் மீது நம்பிக்கை இல்லையென்றால், அந்தத் திட்டமிடலும் பயனற்றதாகிவிடும்; அது வீணாகிப்போகும்.

ஒருவர் ஒட்டகத்தின் மீது பயணம் செய்து வந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கண்டதும், கண்ணியப்படுத்தும் விதமாக கீழே இறங்கினார். அவர் நம்பிக்கை வைக்க நினைத்து, திட்டமிடலைத் தவிர்த்தார்; அதனால் அவர் தமது ஒட்டகத்தின் முழங்காலைக் கட்டவில்லை. அவர் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சந்தித்துத் திரும்பிய போது, ஒட்டகம் அங்கே இல்லை. அவர் மீண்டும் வந்து, நான் நம்பிக்கை வைத்தே வந்தேன்; ஆனால் எனது ஒட்டகம் காணாமல் போய்விட்டது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முறையிட்டார். அதற்கு அன்னார் (ஸல்), நீர் தவறு செய்துவிட்டீர்! முதலில் ஒட்டகத்தின் முழங்காலைக் கட்டிவிட்டு, பின்னர் நம்பிக்கை வைத்திருந்தால் அது சரியாக இருந்திருக்கும்! என்று கூறினார்கள்.' (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 58 - 59)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சில தீனார்கள் வந்தன. அன்னார் (ஸல்) அவற்றில் ஆறு தீனார்களைத் தவிர மற்ற அனைத்தையும் பங்கிட்டு வழங்கிவிட்டார்கள். அந்த ஆறு தீனார்களைத் தமது மனைவியரில் ஒருவரிடம் கொடுத்து வைத்தார்கள்.'

மற்றோர் அறிவிப்பில் வருகிறது: 'ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது இறுதி நோயின் போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி)அவர்களின் நெஞ்சில் சாய்ந்திருந்த நிலையில், ஆயிஷாவே! அந்தத் தங்க தீனார்கள் எங்கே? என்று கேட்டார்கள். அதற்கு, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அவை என்னிடம் பாதுகாப்பாக உள்ளன என்று கூறினார்கள். அப்போது, அன்னார் (ஸல்) அவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவிட்டுவிடுங்கள் என்று கூறினார்கள். அதன் பிறகு நோயின் கடுமையினால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மயக்கம் ஏற்பட்டது.'

அன்னார் (ஸல்) அவற்றை எடுத்து வைப்பதற்காகக் கொடுத்ததும்கூட, ஏதேனும் ஒரு நேரத்தில் பங்கிட்டுக் கொடுப்பதற்காகத்தான்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா அவர்களின் நெஞ்சில் சாய்ந்திருந்த போது, மயக்கம் தெளிந்ததும், 'ஆயிஷாவே! அந்தத் தங்க தீனார்களைச் செலவிட்டு விட்டாயா? என்று மீண்டும் கேட்டபோது அதற்கு, இல்லை! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இன்னும் செலவிடவில்லை என்று அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

'அந்த தீனார்களை எடுத்து வருமாறு அன்னார் (ஸல்) கூறினார்கள். அவை கொண்டு வரப்பட்ட போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவற்றைத் தமது உள்ளங்கையில் வைத்து எண்ணிப் பார்த்தார்கள்; அவை ஆறு தீனார்களாக இருந்தன. பிறகு அன்னார் (ஸல்), இறைவனைச் சந்திக்கும் போதும், உலகத்தை விட்டுப் பிரியும் போதும் இந்த தீனார்கள் முஹம்மது வைத்த நம்பிக்கையின் நிலை என்னவாகும்? என்று கூறினார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தீனார்கள் அனைத்தையும் அல்லாஹ்வின் வழியில் தர்மம் செய்துவிட்டார்கள். அன்றைய தினமே அன்னார் மரணமடைந்து விட்டார்கள். (அத்தப்காத்துல் குப்ரா, தொகுதி 2, பக்கம் 182 - 183, தாருல் குதுபில் இல்மியா)

அல்லாஹ் திருக்குர்ஆனி கூறியுள்ளான்.பொருள்:'அல்லாஹ் நமக்கு எதை விதித்துள்ளானோ, அதைத் தவிர வேறு எதுவும் நம்மை வந்தடையாது; அவனே எங்களது பாதுகாவலன் ஆவான். மேலும், நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும் என்று அவர்களிடம் நீர் கூறிவிடுவீராக!'

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பார்க்கும் போது, ஒரு சந்தர்ப்பத்தில் இறைவன் மீதான நம்பிக்கையின் உயரிய உதாரணத்தை அன்னார் (ஸல்) எவ்வாறு வெளிப்படுத்தினார்கள்? என்பதைக் காண்கிறோம். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்குமாறே கட்டளை உள்ளது; அல்லாஹ்வின் கட்டளைக்கு அன்னார் (ஸல்) (கீழ்படிந்து) எவ்வாறு நடந்து கொண்டார்கள் எனில், முஸைலமா கஸ்ஸாப் தனது படையுடன் வந்து, அன்னாருக்குக் கீழ்படிவதாகக் கூறியபோது ஒரு நிபந்தனையை விதித்தான். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தவொரு நிபந்தனையையும் ஏற்றுக்கொள்ளாமல், அதை கடுமையாக நிராகரித்தார்கள்.

அறிவிப்பில் இவ்வாறு வருகிறது; ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

'முஸைலமா கஸ்ஸாப், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் வந்து, தமக்குப் பிறகு முஹம்மது என்னைத் தனது பிரதிநிதியாக ஆக்கினால், நான் அவரைப் பின்பற்றுவேன் என்று கூறினான். அவன் மதீனாவிற்குத் தனது பெரும்படையுடன் வந்திருந்தான்.' சில அறிவிப்புகளில் அவனது ஆதரவாளர்கள் ஒரு லட்சம் பேர் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வந்தவர்கள் குறைவாகவே இருந்திருப்பர்.

'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனிடம் வந்தார்கள்; அன்னாருடன் ஹஸ்ரத் ஸாபித் பின் கைஸ் பின் ஷம்மாஸ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கையில் பேரீச்ச மரத்தின் சிறிய குச்சி ஒன்று இருந்தது. முஸைலமா தனது தோழர்களுடன் அமர்ந்திருந்த இடத்திற்கு முன்பாக வந்து அன்னார் (ஸல்) நின்று கொண்டு அவனிடம், நீர் என்னிடம் இந்த மரக்குச்சியைக் கேட்டாலும் கூட, இதை



நான் உமக்குத் தரமாட்டேன். உமக்கு எது விதிக்கப்பட்டுள்ளதோ, அல்லாஹ்வின் அந்த முடிவைத் தாண்டி நீர் ஒருபோதும் செல்ல முடியாது. நீர் புறமுதுகிட்டுச் சென்றால், அல்லாஹ் உமது வேரையே அறுத்து விடுவான். எனது கனவில் எவரைக் குறித்து பல விஷயங்கள் காட்டப்பட்டனவோ, அந்த நபராகவே உம்மை நான் காண்கிறேன் என்று கூறினார்கள்.'

அதாவது, என்னை தங்களது பிரதிநிதியாக ஆக்க வேண்டும் என்று அவன் கூறியிருந்த நிலையிலேயே இவ்வாறு பதிலளித்தார்கள். இந்தச் சிறிய குச்சியளவு கூட உமக்குக் கிடைக்காது; கனவில் நான் கண்ட நபர் நீர்தான் என்பதை நான் அறிகிறேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

'மேலும், இதோ ஸாபித் இருக்கிறார்; இவர் எனது பிரதிநிதி. என் சார்பாக இவர் உமக்கு பதிலளிப்பார் என்று கூறிவிட்டு, முஸைலமாவை அதே நிலையில் விட்டுவிட்டு அன்னார் (ஸல்) திரும்பிச் சென்றுவிட்டார்கள்.'

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'எனது கனவில் எவரைக் குறித்துக் காட்டப்பட்டதோ, அந்த நபராகவே உம்மை நான் காண்கிறேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியது பற்றி நான் கேட்டேன். அதற்கு, ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருமுறை நான் தூங்கிக் கொண்டிருந்த போது, எனது இரு கரங்களிலும் தங்கத்தாலான இரு காப்புகளைக் கண்டேன். அவற்றின் நிலை என்னைக் கவலையடையச் செய்தது. பின்னர், அவற்றின் மீது ஊதுமாறு கனவில் எனக்கு வஹீ இறங்கியது. நான் அவற்றின் மீது ஊதியதும், அவை பறந்து விட்டன. பிற்காலத்தில் தோன்றவிருக்கும் இரண்டு பொய்யர்களைப் பற்றியே இதன் விளக்கம் உள்ளது என நான் கருதிக் கொண்டேன். அவர்களில் ஒருவன் அன்ஸீ, மற்றொருவன் முஸைலமா.' (ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண் - 4373 - 4374)

அஸ்வத் அன்ஸீ மற்றும் முஸைலமா ஆகிய இருவரும் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர்; பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் அவர்களுடன் போரும் நடைபெற்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது குறித்து மிகவும் விரிவாக இவ்வாறு எழுதுகிறார்கள்:

'ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு எந்தவொரு விஷயத்திலும் உலகத்தின் பக்கமோ அல்லது உலக மக்களின் பக்கமோ கவனம் இருந்ததில்லை; மேலும் உலக வழிவகைகளின் பக்கம் அன்னார் (ஸல்) ஏறெடுத்தும் பார்த்ததில்லை. மாறாக, ஒவ்வொரு விஷயத்திலும் அன்னாருடைய பார்வை இறைவன் பக்கமே நிலைத்திருந்தது; அவனே அனைத்தையும் செய்வான் என்றிருந்தது. அன்னார் (ஸல்) இறை நம்பிக்கையின் ஒரு முழுமையான முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். இத்தகையதோர் உதாரணம் முந்தைய நபிமார்களிடமும் காணக் கிடைக்கவில்லை; அன்னாருக்குப் பிறகு அன்னாருக்கு நிகரான இறை நம்பிக்கை கொண்ட எந்தவொரு மனிதனும் பிறக்கவில்லை.

உதாரணமாக, வரலாறு நமக்குக் கூறுவதாவது; ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் ஒரு பெரும்படையுடன் மதீனாவிற்கு முஸைலமா அன்னாரிடம் வந்தான். அன்னார் (ஸல்) தமக்குப் பிறகு அவனைத் தமது கலீஃபாவாக ஆக்கினால், அவன் தனது சமூகத்துடன் அன்னாரைப் பின்பற்றுவதாக அன்னாரிடம் கோரிக்கை விடுத்தான். அன்றைய சூழலில் இஸ்லாத்தின் நிலை - அதாவது இஸ்லாத்தின் பலவீனமான நிலை - அன்னார் (ஸல்) இந்த வழியை ஏற்றுக்கொண்டு, அவனது உதவியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றே கோரியது. ஆனால், இறைவனின் ஆற்றல் மீது உறுதியும், நம்பிக்கையும் கொண்டிருப்பதோடு, மனிதத் திட்டங்களைச் சிறிதும் பொருட்படுத்தாத அந்தப் பரிசுத்த ஆன்மா, அவனது கோரிக்கையை உடனடியாக நிராகரித்தது; இது ஒருபோதும் சாத்தியமில்லை என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் காலத்தில் - நான் ஏற்கனவே குறிப்பிட்ட அதே ஹதீஸைத்தான் இங்கே மேற்கோள் காட்டியுள்ளார்கள் - முஸைலமா கஸ்ஸாப் வந்து, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தமக்குக்குப் பிறகு என்னை ஆட்சியாளராக நியமித்தால், நான் அவரைப் பின்பற்றுபவனாக மாறுவேன் என்று கூறினான். அக்காலத்தில் அவன் தனது சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெரும்படையைத் தன்னுடன் அழைத்து வந்திருந்தான். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் இந்தச் செய்தியைக் கேட்டு அவனிடம் வந்தார்கள். அன்னாருடன் ஹஸ்ரத் ஸாபித் பின் கைஸ் பின் ஷம்மாஸ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் கையில் பேரீச்ச மரத்தின் சிறிய கிளை ஒன்று இருந்தது. அன்னார் (ஸல்) வந்து, முஸைலமா தனது தோழர்களுடன் அமர்ந்திருந்த போது அவனுக்கு முன்னால் நின்று கொண்டார்கள். நீர் என்னிடம் இந்த மரக்கிளையைக் கேட்டாலும் கூட, இதை நான் உமக்குத் தரமாட்டேன். இறைவன் உமக்கு எதை விதித்துள்ளானோ, அதைத் தாண்டி நீர் ஒருபோதும் செல்ல முடியாது. நீர் புறமுதுகிட்டுச் சென்றால், அல்லாஹ் உமது குதிக்கால் (நரம்பு)களை அறுத்து விடுவான். எனது கனவில் எவரைக் குறித்துக் காட்டப்பட்டதோ, அந்த நபராகவே உம்மை நான் காண்கிறேன். இதோ ஸாபித் இருக்கிறார்; இவர் என் சார்பாக உமக்கு பதிலளிப்பார் என்று கூறினார்கள். பிறகு அன்னார் அங்கிருந்து சென்றுவிட்டார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகிறார்கள்: - நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல், - எனது கனவில் எவரைக் குறித்துக் காட்டப்பட்டதோ, அந்த நபராகவே உம்மை நான் காண்கிறேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியது பற்றி நான் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்; ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒருமுறை நான் தூங்கிக் கொண்டிருந்த போது, எனது இரு கரங்களிலும் தங்கத்தாலான இரு காப்புகளைக் கண்டேன். அவை எனக்கு விருப்பமில்லாத ஒன்றாகத் தோன்றின. பின்னர், அவற்றின் மீது ஊதித்தள்ளுமாறு கனவில் எனக்கு வஹீ இறங்கியது. நான் ஊதியதும் அவை இரண்டும் பறந்து சென்றுவிட்டன. எனக்குப் பிறகு தோன்றவிருக்கும் இரண்டு பொய்யர்களைப் பற்றியே இதன் விளக்கம் உள்ளது என நான் கருதிக் கொண்டேன். ஒருவன் அன்ஸீ, மற்றொருவன் முஸைலமா.

இந்த நிகழ்விலிருந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவன் மீது எத்தகைய உறுதியான நம்பிக்கை இருந்தது என்பதும், இறைவனின் உதவியைப் பற்றி அன்னார் (ஸல்) எத்துணை மன அமைதியுடன் இருந்தார்கள்! என்பதும் புலனாகிறது. அன்னாரைச் சுற்றிலும் நிராகரிப்பாளர்களின் ஆதிக்கம் இருந்தது; அவர்கள் எப்போதும் அன்னாருக்குத் துன்பமும், வேதனையும் தருவதிலேயே முனைப்பாக இருந்தனர். எந்தெந்த வழிகளில் முடியுமோ அந்த வழிகளிலெல்லாம் அன்னாருக்குத் துன்புறுத்தல்களைச் செய்தார்கள். கைஸர் மற்றும் கிஸ்ராவும் அன்னாருக்கு எதிராகப் போரிடுமாறு தங்களது அதிகாரிகளுக்குக் கட்டளைகளுக்கு மேல் கட்டளைகளை அனுப்பிக் கொண்டிருந்தனர். பனூ ஃகஸ்ஸான் கோத்திரத்தினர் போருக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். பாரசீகர்கள் இந்த வளர்ந்து வரும் சக்தியைப் பொறாமையோடும் வியப்போடும் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒவ்வோர் அரசும் இந்தப் புதிய இயக்கத்தை சந்தேகக் கண்ணோடு பார்த்து வந்தது.

இத்தகையதொரு சூழலில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒரு பெரும்படை திரளாத வரை, எதிரிகளின் தாக்குதலிலிருந்து தப்புவது என்பது வெளிப்படையாக கடினமானது மட்டுமன்றி, சாத்தியமற்றதாகவும் தோன்றியது. மதீனா முதல் மக்கா வரையிலான வெற்றிகள், சுற்றியுள்ள ஒவ்வோர் அரசாங்கத்திற்கும் அன்னாரை ஒரு நேரடிப் போட்டியாளராக நிறுத்தியிருந்தன. தொலைநோக்கு பார்வை கொண்டவர்கள் ஆரம்ப காலத்திலேயே இந்த வளர்ந்து வரும் சக்தியை அழித்துவிட வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தனர். ஏனெனில், இந்த சக்தி மேலும் வளர்ந்தால், நமது பிரம்மாண்டமான அரண்மனைகளின் சிங்கற்களையெல்லாம் தவிடுபொடியாக்கிவிடும் என்பதில் அவர்களுக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது.

இத்தகைய மாபெரும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன ஆயத்தங்களைச் செய்திருந்தாலும், அது போதுமானதாக இருந்திருக்காது. மனித அறிவானது இத்தகைய சூழலில் நண்பர்களையும், எதிரிகளையும் எவ்வாறு தன்னுடன் இணைத்துக் கொள்ள விரும்பும் என்பதையும், எந்தெந்தத் திட்டங்களின் மூலம் அந்நியர்களையும் தங்களுக்குள் சேர்க்க முனையும் என்பதையும் வரலாற்று வாசகர்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியும். ஆனால் எனது அன்புக்குரிய (தலை)வர் பூமிக்குரியவர் அல்லர்; மாறாக விண்ணிற்குரியவர் ஆவார்! திரண்டு வரும்

படைகளும், பாய்ந்து வரும் குதிரைகளும், ஓங்கி உயர்த்தப்படும் ஈட்டிகளும், மின்னும் வாள்களும் அன்னாருடைய பார்வையில் எவ்வித பொருட்டாகவும் இருக்கவில்லை. விண்ணுலக மலக்குகள் இறங்குவதை அன்னார் (ஸல்) பார்த்துக் கொண்டிருந்தார்கள்; மேலும், விண்ணையும் மண்ணையும் படைத்தவன் அன்னாருடைய சேவிகளில் ஒவ்வொரு கணமும் ஆறுதலளிக்கும் வார்த்தைகளைப் பொழிந்து கொண்டிருந்தான். அன்னாருடைய உள்ளம் உறுதியினாலும், நெஞ்சம் ஈமானினாலும் நிறைந்திருந்தது.

சுருங்கக் கூறின், உலகியல் சாதனங்களை நம்புவதற்குப் பதிலாக, அன்னாருடைய நம்பிக்கை இறைவன் மீதே இருந்தது. அப்படியிருக்க, இந்தச் சிரமங்களைக் கண்டு அன்னார் (ஸல்) எப்படி நிலைகுலைந்து போவார்கள்? முஸைலமாவையும் அவனது படையையும் நம்புவதை ஒரு கணமும் அன்னார் (ஸல்) பொருத்தமானதாகக் கருதவில்லை. கிலாஃபத் எனும் ஆசையைக் காட்டி உம்மை என்னுடன் இணைத்துக் கொள்வதும், உமது சமூகத்தின் உதவியைப் பெறுவதும் ஒருபுறமிருக்கட்டும்! பேரீச்ச மரத்தின் ஒரு கிளைக்கு ஈடாக உமது ஆதரவைப் பெற வேண்டியிருந்தாலும் கூட, அதை நான் ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன் என தெளிவாகக் கூறிவிட்டார்கள்.

அந்தத் தன்மானமுள்ள உள்ளத்தின் நிலையைச் சிந்தித்துப் பாருங்கள்! இறைவன் மீது நம்பிக்கை கொண்ட அந்த மனிதரின் மகத்துவத்தை பாருங்கள்! உறுதியால் நிரம்பியிருந்த அந்த உள்ளத்தின் நிலையை உங்கள் உள்ளங்களில் உணர்ந்து பாருங்கள்! எத்தகைய உறுதியோடும் நம்பிக்கையோடும் அன்னார் (ஸல்) முஸைலமாவுக்கு பதிலளித்தார்கள் என்பதை பாருங்கள்! இது போன்ற தருணங்களில் எந்தவோர் அரசராவது இத்தகைய துணிச்சலையும், தைரியத்தையும் வெளிப்படுத்த முடியுமா? இரத்தமும் சதையுமாகப் படைக்கப்பட்ட எந்தவொரு மனிதனும் இத்தகைய நெருக்கடிகளிலிருந்து இத்தனை பாதுகாப்பாக வெளிவருவதை வரலாறு காட்ட முடியுமா? இல்லையெனில், அதற்குக் காரணம் என்ன? அன்னாருடைய வாழ்க்கையோடு மற்றவர்களை ஒப்பிடுவதே தவறானது என்பதுதான் அதற்குக் காரணம்; ஏனெனில் அன்னார் (ஸல்) நபி ஆவார்கள். அன்னாரை ஒப்பிட வேண்டுமெனில் நபிமார்களோடுதான் ஒப்பிட முடியும்; ஆனால் அன்னாருக்கு இருக்கும் மகத்துவத்திற்கு நிகரான உதாரணம் நபிமார்களிடமும் காணக் கிடைப்பதில்லை. ஏனெனில் அன்னார் (ஸல்) அனைத்து நபிமார்களை விடவும் சிறப்பிற்குரியவர் ஆவார்கள்.

இங்கே மற்றொரு விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும்; அது என்னவென்றால், முஸைலமாவுக்கு பதிலளிக்கும் போது, ஆட்சி அதிகாரத்தின் உரிமையைத் தமது சந்ததியினருக்காக (பாதுகாப்பாக) வைத்திருக்க வேண்டும் என்பது ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் நோக்கமாக இருக்கவில்லை. ஏனெனில், அப்படி இருந்திருந்தால், அன்னாருடைய மறுப்பானது அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையின் காரணமாக உருவானதல்ல; மாறாக தமது பிள்ளைகளின் மீதான அன்பின் காரணமாக உருவானது எனக் கருதப்பட்டிருக்கும். ஆனால், ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் தமது பிள்ளைகளைத் தமக்குக்குப் பிறகு தமது பிரதிநிதியாக நியமிக்கவில்லை; மாறாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தையே சுட்டிக்காட்டினார்கள். இதிலிருந்து, அன்னாருடைய மறுப்பானது எந்தவோர் உலகியல் நோக்கத்திற்காகவும் உருவானதல்ல; மாறாக எல்லையற்ற (இறை) நம்பிக்கையின் வெளிப்பாடே என்பது விளங்குகிறது.

அதேபோன்று, முஸைலமா கஸ்ஸாபின் உதவியைப் பெறுவது என்பது வெளிப்படையாக மார்க்க ரீதியாகவும் எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்துவதாக இருக்கவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில், இன்னின்ன மார்க்க விஷயங்களில் நீங்கள் எனது பேச்சைக் கேட்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே நான் உங்களைப் பின்பற்றுவேன் என்ற நிபந்தனையை அவன் முன்வைத்திருந்தால், தமது நிலைப்பாட்டைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவோ அல்லது சுயநலத்தின் காரணமாகவோ அன்னார் (ஸல்) அவனது கோரிக்கையை மறுத்துவிட்டார்கள் என்று கூறலாம்.

அதாவது, 'நான் கூறுவதைக் கேளுங்கள் என்று அவன் கூறியதை ஏற்பதில் தமது பிடிவாதத்தைக் காப்பதற்காகவே மறுத்தார்கள் என்று கூற முடியும். ஆனால், மார்க்கத்தில் அவன் மாற்றத்தை விரும்புகிறான் என்று தெரிவிக்கும் வகையில் அவன் எந்தவொரு விஷயத்தையும் பேசவில்லை. எனவே, அன்னாருடைய மறுப்பானது, அன்னாருக்கு அல்லாஹ் மீது இருந்த நம்பிக்கை மற்றும் உறுதியின் விளைவு மட்டுமேயாகும்.

இங்கு நினைவில் கொள்ள வேண்டிய மற்றொரு விஷயமும் உள்ளது; அது என்னவென்றால், அன்னார் (ஸல்) விரும்பியிருந்தால் அந்த நேரத்தில் முஸைலமாவைப் பிடித்துக் கொன்றிருக்க முடியும். அவன் ஒரு பெரும்படையுடன் வந்திருந்தபோதிலும், மதீனாவில்தான் இருந்தான்; அன்னாருடைய கட்டுப்பாட்டின் கீழ்தான் இருந்தான். ஆனால், இந்த விஷயத்திலும் அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைத்தார்கள். அல்லாஹ்வே அந்தத் தீயவனை அழிப்பான் என்று நம்பினார்கள்.

இப்போது தொழுகைக்குப் பிறகு, நான் சில ஜனாஸா காயிப் தொழுகைகளைத் தொழ வைப்பேன். சில மர்ஹூம்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

அதில் முதலாவதாக, மண்டி பஹாவுத்தீனைச் சேர்ந்த மதிப்பிற்குரிய குலாம் ரஸூல் ஸாஹிப் அவர்களின் மகன், மதிப்பிற்குரிய மிர்ஸா ஸஃப்தர் மஹ்மூத் ஸாஹிப் ஆவார்கள். இவர்கள் கடந்த செப்டம்பர் 2 ஆம் தேதி மண்டி பஹாவுத்தீனில் ஷஹீதாக்கப்பட்டுள்ளார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அடையாளம் தெரியாத நபர் ஒருவர் பின்தொடர்ந்து வந்து, பின்னாலிருந்து துப்பாக்கியால் சுட்டு இவர்களை ஷஹீதாக்கியுள்ளான். ஷஹாதத்தின் போது மர்ஹூமின் வயது 65 ஆகும்.

விவரங்களின்படி, இந்தச் சம்பவம் நடந்த அன்று மிர்ஸா ஸஃப்தர் மஹ்மூத் ஸாஹிப் அவர்கள் மக்ரிப் தொழுகையை நிறைவேற்றுவதற்காகத் தமது work shop லிருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார்கள். வழியில் ஆள்நடமாட்டமில்லாத ஒரு பாழடைந்த பகுதி வருகிறது; அந்த இடத்தை கடந்து செல்லும் போது, அடையாளம் தெரியாத ஒருவன் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்து, பின்னாலிருந்து துப்பாக்கியால் சுட்டுள்ளான். மர்ஹூம் மீது மூன்று குண்டுகள் பாய்ந்தன; அதன் விளைவாக சம்பவ இடத்திலேயே அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். சம்பவத்திற்குப் பிறகு தாக்குதல் நடத்தியவன் தப்பி ஓடிவிட்டான்.

ஷஹீத் மர்ஹூமுடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் ஷஹீதுடைய தாய்வழிப் பாட்டி மதிப்பிற்குரிய ஹுஸைன் பீபி ஸாஹிபா அவர்கள் மூலமாக வந்தது. இவர்கள் குஜராத் மாவட்டத்தைச் சேர்ந்த காரியான் பகுதியைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். பொதுவாகக் குடும்பங்களில் ஆண்களின் மூலமாகவே அஹ்மதிய்யத் கிடைக்கும்; ஆனால் இங்கே ஒரு பெண்மணியின் மூலமாக இவர்களது குடும்பத்திற்கு அஹ்மதிய்யத் கிடைத்தது. அவர்கள் இரண்டாவது கலீஃபா (ரலி) அவர்களின் ஆரம்பக் காலத்தில் பைஅத் செய்யும் நல்வாய்ப்பை பெற்றிருந்தார்கள். பின்னர், பாட்டி ஹுஸைன் பீபி ஸாஹிபாவின் தூண்டுதலாலும் தப்லீஃக்கினாலும், ஷஹீத் மர்ஹூமின் தந்தைவழிப் பாட்டனாரும், உறவினருமான மதிப்பிற்குரிய நவாப் தீன் ஸாஹிப் அவர்களும் பைஅத் செய்தார்கள்.

ஷஹீத் அவர்கள் தமது பகுதியில் ஒரு குறிப்பிடத்தக்க அஹ்மதியாக விளங்கியதோடு, தமது தொழில் மற்றும் திறமையின் அடிப்படையில் முக்கிய புகழ் பெற்றவராகவும் இருந்தார்கள். மெக்கானிக்காக இருந்த அவருக்குச் சொந்தமாக வொர்க் ஷாப் இருந்தது; நல்ல வியாபாரமும் நடைபெற்றது. உண்மையை பேசுதல், கோட்பாடுகளைப் பின்பற்றுதல், பொய்யின் மீது வெறுப்பு ஆகியவை அவரது முக்கிய நற்பண்புகளாக இருந்தன. தம்மிடம் வரும் ஒவ்வொருவரையும் மிகுந்த இன்முகத்தோடும் அன்போடும் வரவேற்பார்கள்; மிகுந்த உற்சாகத்துடன் ஸலாம் கூறுவார்கள். அவரது கடையிலிருந்து எந்தவொரு யாசகரும் வெறுங்கையோடு திரும்பியதில்லை.

ஷஹீத் மர்ஹூமின் மனைவி நவீதா சாஹிபா கூறுகையில்: 'கிலாஃபத்தின் மீது அவர்களுக்கு அளப்பரிய அன்பு இருந்தது. ஜவேளைத் தொழுகையைத் தவிர, தஹஜ்ஜுத் தொழுபவராகவும், தவறாமல் MTA நிகழ்ச்சிகளைப் பார்த்து பயன் பெறுபவராகவும் இருந்தார். ஒவ்வொரு மாதமும் 1 ஆம் தேதி தமது வருமானக்

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம்..

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து தவக்குல் அலல்லாஹ் தொடர்பான ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 செப்டம்பர் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **தபூக்** மாதம் **11 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

மாநபி (ஸல்) அவர்களின் தவக்குல் அலல்லாஹ் (அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை) குறித்து கடந்த ஜுமுஆவில் எடுத்துரைத்திருந்தேன். இன்றும் இதுவே தலைப்பாகும். நம்பிக்கையாளர்களுக்கு இறைநம்பிக்கை குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியவாறு அன்னார் (ஸல்) கூறியதாக ஹஸ்ரத் அபூதர்தாஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பொருள்: அல்லாஹ் எனக்குப் போதுமானவன்; வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு எவனும் இல்லை; அவன் மீதே நான் முழு நம்பிக்கை வைத்துள்ளேன்; அவன் மகத்தான அரியணையின் இறைவன் ஆவான்) என்று எவர் காலையிலும், மாலையிலும் ஏழு முறை கூறுகிறாரோ, அவருக்குக் கவலையளிக்கும் விஷயங்களுக்கு - அவர் அதில் உண்மையாளராக இருந்தாலும் சரி, பொய்யராக இருந்தாலும் சரி - அல்லாஹ்வே போதுமானவனாக இருப்பான். (ஸுனன் அபூ தாவூத், கிதாபுல் அதப், ஹதீஸ் எண்: 5081)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது இறைநம்பிக்கை தொடர்பாக எவ்வாறு துஆ செய்து வந்தார்கள்? என்பது பற்றி ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் ருகூவிற்குச் செல்லும் போது, இந்த துஆவை செய்து வந்தார்கள்.

பொருள்: அல்லாஹ்வே உனக்காகவே நான் ருகூஃ செய்தேன். மேலும், உன் மீது நம்பிக்கை வைத்துள்ளேன். என்னை நானே உன்னிடம் ஒப்படைத்து விட்டேன். மேலும் உன் மீது முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளேன். நீயே என் இறைவன் ஆவாய். என் செவிப்புலனும், பார்வையும், குருதியும், தசையும், எலும்புகளும், நரம்புகளும் அகிலங்கள் அனைத்துக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்குப் பணிந்துவிட்டன. (ஸுனன் நிஸாயீ, கிதாபுத் தத்பீக், ஹதீஸ்: 1051)

பின்னர் ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். மாநபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கு ஏதேனும் துன்பம் நேரிடும் போதெல்லாம் ஜிப்ரீல் (அலை) எனக்கு அருகே, என் முன்னே தோன்றி, முஹம்மதே! இவ்வாறு கூறுவீராக! எனக் கூறுவார்கள்.

பொருள்: என்றுமே மரணிக்காத உயிருள்ள அந்த இறைவன் மீது நான் முழு நம்பிக்கை வைத்துள்ளேன். எவ்வித மகனையும் ஒருபோதும் தனக்கென வைத்துக் கொள்ளாதவனும், தனது ஆட்சியில் ஒருபோதும் எவ்விதக் கூட்டாளியும் இல்லாதவனும், சிறுமையிலிருந்து தன்னைக் காக்கும் துணையாளன் எவனும் தேவைப்படாதவனுமாகிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் உரியது; அவனுடைய பெருமையை நீர் பெருமளவாகப் போற்றிப் புகழ்வீராக! (அல்முஸ்தத்ரக் அலா ஸஹீஹைன், கிதாபுத் துஆ, ஹதீஸ் எண்: 1876 தொகுதி 1, பக்கம் 689, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்களிடமிருந்து கேட்டதாக தாஅவூஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்கள் கூறினார்கள்:

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இரவில் தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழும்போது இவ்வாறு துஆ செய்வார்கள். பெரிய துஆவாகும்.

அதன் பொருள்: அல்லாஹ்வே! அனைத்துப் புகழும் உனக்கே உரியது. வானங்களையும், பூமியையும் அவற்றுள் உள்ளவற்றையும் நிலைநிறுத்துபவன் நீயே. அனைத்துப் புகழும் உனக்கே உரியது. வானங்கள், பூமி மற்றும் அவற்றுள் உள்ள அனைத்தின் ஆட்சியும் உனக்கே உரியது. அனைத்துப் புகழும் உனக்கே உரியது. வானங்களுக்கும் பூமிக்கும் அவற்றுள் உள்ளவற்றுக்கும் ஒளியாக இருப்பவன் நீயே! அனைத்துப் புகழும் உனக்கே உரியது. வானங்களுக்கும் பூமிக்கும் அவற்றுள் உள்ளவற்றுக்கும் அரசன் நீயே! அனைத்துப் புகழும் உனக்கே உரியது. நீயே மெய்யானவன்; உன் வாக்குறுதி மெய்யானது; உன்னைச் சந்திப்பதும் நிச்சயமாக நிகழும்; உன் சொற்கள் மெய்யானவை; சுவர்க்கமும் மெய்யானது; நரகமும் மெய்யானது; அனைத்து நபிமார்களும் உண்மையாளர்கள்; ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களும் உண்மையாளர் ஆவார்கள்; மறுமை நாளும் மெய்யானது. அல்லாஹ்வே! உன் முன் நான் முற்றிலுமாகப் பணிந்தேன்; உன் மீதே நம்பிக்கை கொண்டேன்; உன்னையே நம்பியிருக்கிறேன்; உன் பக்கமே குனிந்திருக்கிறேன்; உனக்காகவே நான் இந்த எதிர்ப்பை எதிர்கொண்டிருக்கிறேன். அல்லது உன்னுடைய உதவியாலேயே நான் பகைவர்களை எதிர்கொண்டேன்; உன்னிடமே தீர்ப்பு வேண்டினேன். நான் முன்னர் செய்த, பின்னர் செய்த, மறைவாகச் செய்த, வெளிப்படையாகச் செய்த அனைத்திற்குமாக என்னை மன்னித்தருள்வாயாக! முற்படுத்துபவனும் நீயே, பிற்படுத்துபவனும் நீயே. உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை.' அல்லது லா இலாஹ் கைய்ருக் என்று கூறுவார்கள், (பொருள்: ஸஹீஹ் புஹாரி, கிதாபுத் தஹஜ்ஜுத், ஹதீஸ் 1120)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்து வந்தார்கள்: அல்லாஹ்வே! நான் உனக்குக் கட்டுப்பட்டவன்; உனக்குக் கீழ்ப்படிதலை மேற்கொள்பவன்; உன் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன்; உன்னையே நம்பியிருக்கிறேன்; உன் பக்கமே குனிகிறேன்; உன் உதவியைக் கொண்டே நான் எதிர்கொள்கின்றேன். அல்லாஹ்வே! நீ என்னை வழிகேட்டில் விட்டுவிடுவதிலிருந்து உன்னுடைய கண்ணியத்தின் (வாயிலாக உன்னிடம்) அடைக்கலம் தேடுகின்றேன். உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை. நீயே உயிருள்ளவன்; உனக்கு என்றுமே மரணம் வராது; ஆனால் ஜின்களும் மனிதர்களும் மரணித்துவிடுவார்கள்.' (ஸஹீஹ் முஸ்லிம் கிதாப் அத்திக்ர் வத் துஆ வத் தவ்பா, தொகுதி 14, பக்கம் 91, ஹதீஸ் எண்: 4880)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பார்வை ஒவ்வொரு கணமும் அல்லாஹ்வை நோக்கியே அமைந்திருந்தது. அன்னாரின் இந்தப் பண்பின் உயர்த்தரத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் எழுதியுள்ளார்கள், மாறாகத் தம் திருக்குர்ஆன் விரிவுரையில் இவ்வாறு விவரித்துள்ளார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது எத்தகைய தவக்குல் இருந்தது என்றால், ஒவ்வொரு இன்னலின்

போதும் சிரமத்தின் போதும் அவனையே நம்பியிருப்பார்கள்; அவனைத் தவிர மற்ற அனைத்துப் பொருட்களிலிருந்தும் தம் கவனத்தைத் திருப்பிக் கொள்வார்கள். இன்றைய சூஃபிகளைப் போல் அன்னார் (ஸல்) காரணிகளைக் கைவிட்டவராக இருக்கவில்லை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அதாவது, பொருட்கள் தேவையில்லை; தவக்குல் (இறைநம்பிக்கை) மட்டுமே அவசியம் என்று கூறும் இன்றைய சூஃபிக்களைப் போல் இருக்கவில்லை. ஹுஸூர் (ஸல்) அவர்கள் காரணிகளைப் பயன்படுத்தி வந்தார்கள்; ஏனெனில், காரணிகளைக் கைவிடுவது அல்லாஹ் படைத்த படைப்புகளை இழிவுபடுத்துவதற்கும் அவனது படைப்பை வீணானது என முடிவு செய்வதற்கும் சமமாகும். ஆனால், காரணிகளை ஆயத்தம் செய்த பிறகு, அன்னார் (ஸல்) முற்றிலுமாக இறைவனேயே சார்ந்திருந்தார்கள். அவ்வாறு காரணிகளை ஆயத்தம் செய்தபோதிலும், அவற்றின் மீது ஒருபோதும் நம்பிக்கை வைக்கவோ அல்லது அவற்றை நம்பியிருக்கவோ மாட்டார்கள்; மாறாக, இறைவனின் அருளை மட்டுமே எதிர்பார்த்திருப்பார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் எந்தவொரு பதற்றமான சூழ்நிலையிலும் இவ்வாறு துஆ செய்வார்கள்.

பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை; அவன் மகத்தான அரியணையின் இறைவன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை; அவன் வானங்களின் இறைவன், பூமியின் இறைவன்; மகத்தான அரியணையின் இறைவன் ஆவான். (ஸீரத்துன் நபி (ஸல்) அவர்கள், அன்வாருல் உலூம், தொகுதி 1, பக்கம் 496 - 497)

அதாவது, என் நம்பிக்கையும் தவக்குலும் அல்லாஹ்வின் மீது மட்டுமே உள்ளது (என்பது இதன் பொருளாகும்).

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

பொருள்: அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன்; அவனே சிறந்த பொறுப்பேற்பாளன் ஆவான். தாம் நெருப்பில் எறியப்பட்ட அந்த நேரத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இதனை கூறினார்கள். மேலும், (நிராகரிப்பாளர்களாகிய) அவர்கள் உங்களுக்கெதிராகப் பெரும் ஆயத்தம் செய்துள்ளனர்; எனவே அவர்களுக்கு அஞ்சுங்கள் என்று மக்கள் கூறிய போது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களும் இதையே கூறினார்கள்.

ஹதீஸ் விரிவுரையாளர்களின் கூற்றுப்படி, இது உஹுதுப் போர், ஹம்ராவுல் அஸத் அல்லது அகழ்ப்போரின் போது கூறப்பட்டதாகும். இந்நிகழ்வு அவர்களின் ஈமானை மேலும் அதிகப்படுத்தியது; மேலும் அவர்கள், அதாவது, அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன்; அவனே சிறந்த பொறுப்பேற்பாளன்' என்று கூறினார்கள். புஹாரியில் இந்த அறிவிப்பு வருகின்றது.

பல்வேறு தருணங்களில் மக்காவின் இணைவைப்பாளர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் முன்மொழிவுகளை எடுத்து வைப்பதும், அதாவது, பல்வேறு வகையான பேராசைக் காட்டுவதும், கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் மீது இணையற்ற தவக்குல் வைத்து பதில் அளிப்பதும் ஆகிய இவை எத்தகையவை?

அத்தகையதொரு நிகழ்வை இப்னு இஸ்ஹாக் குறிப்பிட்டுள்ளார்: ஒரு நாள் குறைஷிகளின் தலைவனான உத்பா பின் ரபீஆ குறைஷிகளின் அவையில் அமர்ந்திருந்தான்; அதே வேளையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமில் தனியாக அமர்ந்திருந்தார்கள். குறைஷிக் குழுவினரே! நான் முஹம்மது(ஸல்) அவர்களிடம் சென்று பேசட்டுமா?; நான் அவரிடம் சில முன்மொழிவுகளை வைக்கின்றேன்; ஒருவேளை அவர் அவற்றில் எதையேனும் ஏற்றுக்கொள்ளக் கூடும்; நாம் அவரது விருப்பத்தை நிறைவேற்றித் தருவோம்; அதற்குப் பகரமாக அவர் நமக்கு எதிரான தம் பிரச்சாரத்தைக் கைவிடட்டும் என்று உத்பா கூறினான்.

இது ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தருணத்தில் நடந்ததாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தோழர்கள் நாளுக்கு நாள் பெருகி வருவதைக் குறைஷிகள் கண்டு கொண்டிருந்ததால், அவர்கள் நிச்சயமாக அபூல் வலீதே! நீங்களே சென்று அவர்களிடம் பேசுங்கள் என்று கூறினர். அதன்படி உத்பா ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, அவர்களின் அருகே அமர்ந்து கூறத் தொடங்கினான்: என் சகோதரன் மகனே! உமது குடும்பத்தில் உமக்குள்ள உயர்ப் பதவியையும் கண்ணியமான குலப் பின்னணியையும் நீர் நன்றாக அறிவீர். ஆனால் நீர் உமது சமுதாயத்தினரிடம் எத்தகைய பெரிய விஷயத்தைக் கொண்டு வந்துள்ளீர் என்றால், அது அவர்களின் ஒற்றுமையைச் சிதறடித்துவிட்டது; அவர்களின் அறிவை அற்பமானதாகக் காட்டுகிறது; அவர்களின் கடவுள்களையும் மார்க்கத்தையும் தீயதாகக் கூறியுள்ளது; இறந்துபோன அவர்களின் மூதாதையர்களைக் காஃபிர்கள் என்று முடிவு செய்துள்ளது. இப்போது நான் கூறும் சில விஷயங்களைச் சற்று உற்றுக் கேட்பீராக! உமக்கு முன்னே சில முன்மொழிவுகளை வைக்கின்றேன்; ஒருவேளை அவற்றில் ஏதேனும் ஒன்றை நீர் ஏற்றுக்கொள்ளக் கூடும்.

அபூல் வலீதே! கூறுவாயாக! நான் கேட்கின்றேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். உத்பா கூறினான்: 'என் சகோதரன் மகனே! இந்த அழைப்புப் பணியின் மூலம் செல்வத்தைப் பெறுவதுதான் உமது நோக்கம் என்றால், நாங்கள் எங்கள் செல்வங்களை ஒன்றுதிரட்டி, உமக்கு எந்த அளவுக்கு செல்வத்தை வழங்கிவிடுவோம் என்றால், நீர் எங்களில் எல்லாரையும் விடவும் பெரும் செல்வந்தராகி விடுவீர். நீர் கண்ணியத்தையும், தலைமையையும் விரும்பினால், உம்மை எங்கள் தலைவராக ஆக்கிக் கொள்வோம்; பிறகு, உமது ஆலோசனையின்றி எந்தவொரு முடிவையும் நாங்கள் எடுக்கமாட்டோம்.நீர் ஆட்சியை விரும்பினால், உம்மை எங்கள் அரசராக ஏற்றுக் கொள்கின்றோம்.

அல்லது உம்மிடம் இருந்து உம்மால் விரட்ட முடியாத ஏதேனும் ஆவியோ, ஜின்னோ உம்மை ஆட்கொண்டிருந்தால் - அக்கால மக்களிடையே, ஜின்கள் பிடித்துக் கொண்டது போல என்ற மூடநம்பிக்கை வழக்கத்திலிருந்தது - நாங்கள் சிறந்த மருத்துவர்களைக் கொண்டு உமக்குச் சிகிச்சை அளிக்கின்றோம்; நீர் முழுமையாகக் குணமடையும் வரை அதற்காக எங்களின் செல்வத்தைச் செலவிடுகின்றோம். ஏனெனில் சில நேரங்களில் மனிதனை இத்தகைய நிலைமை ஆட்கொண்டுவிடும்; அதற்குச் சிகிச்சை அளிக்க நேரிடுகிறது. உத்பா தனது பேச்சை முடித்திருந்தான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவன் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். பின்னர் நபி பெருமானார் (ஸல்) அவர்கள், அபூல் வலீதே! உமது பேச்சை முடித்துவிட்டீரா? என்று கேட்டார்கள். அதற்கு, ஆம்! என்று அவன் கூறினான். எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள், இப்போது என் பேச்சைக் கேளுங்கள் என்றார்கள். அதற்கு அவன், நிச்சயமாக, நான் கேட்கின்றேன் என்று கூறினான்.

அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் சூரா ஹா-மீம் அஸ்-ஸஜ்தாவின் வசனங்களை ஓதிக் காட்டினார்கள்:

அதன் பொருள்: அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஓதுகின்றேன். புகழுக்குரியவனும், மகத்துவமிக்கவனுமாகிய இறைவனின் பண்பு இந்த சூராவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்தக் குர்ஆன் அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனிடமிருந்து இறக்கப்பட்டதாகும். இதன் வசனங்கள் தெளிவுற விவரிக்கப்பட்டுள்ளன. இது பெரிதும் ஓதப்படும் மறையாகும். இது தனது நோக்கத்தைத் தானே தெளிவாக விளக்கம் தரவல்ல மொழியில் அமைந்ததாகும். ஆனால், இந்த மறை ஆன்மிக அறிவு கொண்ட மக்களுக்கு மட்டுமே பயனளிக்கக்கூடியதாகும். நன்மக்களுக்கு நற்செய்தி தரக்கூடியதும், துன்மக்களை எச்சரிக்கக்கூடியதும் ஆகும். இருப்பினும் அவர்களில் பெரும்பாலோர் புறக்கணித்துவிட்டனர்; மேலும், அவர்கள் அதை செவியேற்கவும் ஆயத்தமாக இல்லை. மேலும் அவர்கள் கூறுகிறார்கள்: நீர் எங்களை எதன் பக்கம் அழைக்கின்றீரோ, அதை ஏற்பதை விட்டும் எங்கள் உள்ளங்கள் திரையிடப்பட்டுள்ளன. அதாவது, அது எங்கள் உள்ளங்களில் தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. (ஹாமீம் ஸஜ்தா, 1 - 6)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வசனங்களை ஓதிக்கொண்டே இருந்தார்கள்; உத்பா அமைதியாக முழு கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் தன் இரு கைகளையும் பின்புறமாக ஊன்றியவாறு, மிகுந்த

மனவொருமைப்பாட்டுடன் திருக்குர்ஆனைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஜ்தாவுடைய வசனத்தை அடைந்ததும் ஸஜ்தா செய்தார்கள். பின்னர் உத்பாவிடம், அபுல் வலீதே! நீர் கேட்க வேண்டிய அனைத்தையும் கேட்டுவிட்டீர். இனி முடிவு உமது கையில் தான் உள்ளது. உமது பேச்சை நான் கேட்டுவிட்டேன்; என் பேச்சை நீர் கேட்டுவிட்டீர். இனி நீரே முடிவெடுப்பீராக! நான் என்ன முடிவு எடுக்க வேண்டும்! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் மீதிருந்த முழுமையான நம்பிக்கையும், தவக்குலும் ஒவ்வொரு நாளும் ஒரு புதிய மேன்மையில் வெளிப்பட்டது. இதன்படி வரலாறு கூறுகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் உத்பாவிற்கு இவ்வாறு பதிலளித்தார்கள். பதிலளித்த பிறகு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம்முடைய அதே நிலையில் நிலைத்திருந்தார்கள். அன்னார் (ஸல்) தம்மை மாற்றிக் கொள்வதாகக் கூறவில்லை; மாறாக, நீரே உம்மை மாற்றிக் கொள்வீராக! முடிவெடுப்பீராக! என்றே அவனிடம் கூறினார்கள்; மேலும் அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பரப்புவதிலும், அதன் பக்கம் அழைப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார்கள்.

பின்னர் அந்த காஃபிர்களின் குழுவினர் அனைவரும் ஒன்று சேர்ந்து அபூதாலிபிடம் சென்று அவரிடம், நாங்கள் உங்களிடம் உங்கள் சகோதரன் மகனைத் தடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தோம்; ஆனால் நீங்கள் அவரைத் தடுக்கவில்லை. எனவே, எங்களைப் பற்றி அவர் இவ்வாறு பேசுவதை நாங்களே தடுத்து நிறுத்துவோம்; அல்லது அவரையும் உங்களையும் எதிர்த்து சண்டையிடுவோம்; இறுதியில் இருசாராரில் ஒரு சாரார் அழியும் வரை இது தொடரும் என்று கூறினர். குறைஷிகள் அபூதாலிபிடம் இவ்வாறு கூறியதும், அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அழைத்து வரச்செய்து அன்னாரிடம், என் சகோதரன் மகனே! என்னால் தாங்க முடியாத அளவுக்கு என் மீது சுமையைச் சுமத்திவிடாதீர்! என்று கூறினார்.

தம் பெரிய தந்தையார் தமக்கு உதவுவதைக் கைவிட்டுத் தம்மைக் குறைஷிகளிடம் ஒப்படைத்துவிடுவாரோ என்று பெருமானார் (ஸல்) அவர்கள் எண்ணினார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், என் பெரிய தந்தையே! இறைவன் மீது ஆணையாக! இவர்கள் என் வலக்கையில் சூரியனையும் இடக்கையில் சந்திரனையும் வைத்தாலும், நான் என் கடமையிலிருந்து பின்வாங்க மாட்டேன்; இறைவன் இப்பணியை முழுமையாக்கும் வரை அல்லது இந்த முயற்சியில் நான் அழியும் வரை என் பணியைத் தொடர்ந்து செய்வேன் என்று கூறினார்கள். பின்னர் அன்னார் (ஸல்) எழுந்து அங்கிருந்து புறப்படத் தொடங்கிய போது, அபூதாலிப் அன்னாரை அழைத்து, என் சகோதரன் மகனே! நீர் விரும்பியதைக் கூறும்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! எந்தவொரு பிரதிபலனுக்காகவும் உம்மை நான் அவர்களிடம் ஒருபோதும் ஒப்படைக்க மாட்டேன் என்று கூறினார். (அஸ் ஸீரத்துன் நபவிய்யா, லி இப்னு ஹிஷாம், பக்கம் 200 - 202, 220, தாருல் குதுபில் இல்மியா, 2001-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த உண்மையான வரலாற்று நிகழ்வுகளைக் காட்சிப்படுத்தியவாறு இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தவ்ஹீதைக் குறித்து மக்களுக்கு அறிவுரை வழங்கத் தொடங்கினார்கள். மேலும், இணைவைத்தலை நிராகரிக்கத் தொடங்கினார்கள். அப்போது, அது மக்கத்தினருக்குப் பெரும் விரும்பத்தகாத ஒன்றாக அமைந்தது. இறுதியாக ஒரு நாள் காஃபிர்கள் ஒன்றிணைந்து, ஒரு குழுவாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெரிய தந்தை அபூதாலிபிடம் வந்தனர்.

அவரிடம், நீங்கள் எங்கள் சமுதாயத்தின் தலைவராக இருக்கின்றீர்கள்; நாங்கள் உங்களைப் பெரிதும் மதிக்கிறோம். உங்கள் மீதான மரியாதை காரணமாகவே நாங்கள் உங்கள் சகோதரன் மகனை எதுவும் சொல்வதில்லை. ஆனால் இப்போது விஷயம் எல்லை மீறிவிட்டது. எங்களுடைய சார்பில் நீங்கள் இந்த விஷயத்தில் இறுதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதற்காகவே உங்களிடம் வந்துள்ளோம் என்று கூறினர். பின்னர் உத்பா ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறிய அதே விஷயங்களைக் கூறினார்கள். அதாவது உயர்குடியைச் சேர்ந்த, மிக அழகிய பெண் பற்றிய ஆசை, பணத்தாசை, செல்வ ஆசை, ஆட்சி ஆசை ஆகியவற்றை மீண்டும் எடுத்துக் கூறினர்.

இதைக் குறிப்பிட்டுவிட்டு அவர்கள், ஆனால் எங்கள் சிலைகளைப் பழித்துக் கூறாமல் இருக்கும் அளவுக்கு அவர் நடந்து கொள்ள வேண்டும் என்று அவரிடம் கூறுங்கள். அவர் எங்கள் சிலைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. எங்கள் சிலைகளைப் பழித்துக் கூறாமல் இருந்தால் மட்டும் போதும் என்றுதான் கூறுகின்றோம். அவர் எங்களின் இந்த முன்மொழிவுகளில் ஒன்றைக் கூட ஏற்றுக் கொள்ளாவிட்டால், நீங்கள் அவருக்குத் துணை நிற்பதை விட்டுவிடுங்கள்; நாங்களே அவரைப் பார்த்துக் கொள்கின்றோம் என்று கூறினர்.

அபூதாலிப் மிகவும் நல்ல மனிதராக இருந்தார்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது மிகுந்த அன்பும் கொண்டிருந்தார்; எனினும் அவருக்குத் தமது தலைமையும் மிகவும் பிரியமானதாக இருந்தது. அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அழைத்துவரச்செய்து, இன்று உமது சமுதாயத்தினர் என்னிடம் வந்திருந்தனர். அவர்கள், அபூதாலிபே! நாங்கள் உம் மீது மரியாதைக் கொண்டுள்ளோம்; உம் மீதான மரியாதை காரணமாகவே உமது சகோதரன் மகனை இதுவரை எதுவும் சொல்லவில்லை. ஆனால் இப்போது விஷயம் எல்லை மீறிவிட்டது. அவர் வேறு எதையும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், எங்கள் சிலைகளைப் பழித்துக் கூறாமல் இருக்கட்டும் என்று மட்டும் அவரிடம் கூறிவிடுங்கள். நாங்கள் அவரை எங்களின் அரசராக்கத் தயாராக இருக்கின்றோம்; செல்வம் தேவை என்றால் செல்வத்தைத் தரத் தயாராக இருக்கின்றோம், அரபியாவிலேயே அவரை விடப் பெரும் செல்வந்தர் எவரும் இருக்க மாட்டார்; அந்த அளவுக்கு அவருக்குக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஓர் அழகிய மனைவி தேவை என்றால், அழகிலும் அழகிய பெண்ணுடன் அவருக்குத் திருமணம் செய்துவைக்கவும் தயாராக இருக்கின்றோம். சுருங்கக் கூறின், அவர் எந்தக் கோரிக்கையை வைத்தாலும் அதை நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கின்றோம்; அவர் எங்கள் சிலைகளைப் பழித்துக் கூறாமல் இருந்தால் மட்டும் போதும் என்று கூறுகின்றனர் எனக் கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அபூதாலிப் பெரும் நன்மைகள் புரிந்திருந்தார். அவர் குழந்தைப்பருவத்திலிருந்தே அண்ணல் நபி (ஸல்) அவர்களை மிகுந்த அன்போடும் பாசத்தோடும் வளர்த்திருந்தார்; மேலும் ஒவ்வொரு துன்பத்திலும், துயரத்திலும் அவர்களோடு உறுதுணையாக நின்றிருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் பெரிய தந்தையின் இந்நிலையைக் கண்ட போது, அவரது பேருதவிகளை நினைவுகூர்ந்து அவர்களின் கண்களில் கண்ணீர் பெருகியது.

எனினும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெரிய தந்தையே! நீங்கள் எனக்கு உதவ வேண்டும் என்று நான் கூறவில்லை; நீங்கள் தாராளமாக உங்கள் சமுதாயத்துக்குத் தோள் கொடுங்கள், என்னை விட்டுவிடுங்கள். இறைவன் மீது ஆணையாக! இவர்கள் என் வலக்கரத்தில் சூரியனையும் என் இடக்கரத்தில் சந்திரனையும் கொண்டு வந்து நிறுத்தினாலும் சரி! நான் ஏக இறைவனைப் பற்றி எடுத்துக் கூறுவதிலிருந்து பின்வாங்க மாட்டேன்.

பாருங்கள்! இறைவன் மீது எத்தகைய உறுதியும், தவக்குலும் அன்னாருக்கு இருக்கிறது! ஏனெனில், சூரியன் தனது இடத்தை விட்டு நகர்வது எவ்வளவு பெரிய அற்புதம் என்றால், இது நிகழ்ந்தால் மனிதன் வியப்பில் ஆழ்ந்து விடுவான். எனினும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், இவர்கள் சூரியனை அதன் இடத்திலிருந்து நகர்த்தி என் அருகே கொண்டு வந்து நிறுத்தினாலும், சந்திரனை அதன் இடத்திலிருந்து நகர்த்தி என் அருகே கொண்டு வந்து நிறுத்தினாலும், இறைவன் மீது எனக்கு எத்தகைய அழுத்தமான நம்பிக்கையும், உறுதியும் உள்ளது என்றால், இவற்றை நான் வெறும் மாயாஜாலமாகவே கருதுவேன். நான் இவர்களின் சிலை வழிபாட்டைக் கண்டிப்பதைத் தொடர்ந்து செய்வேன்; என் பணியிலிருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டேன் என்று கூறினார்கள்.

இது அல்லாஹ்வின் மீது கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையிலும் முழுமையான தவக்குலிலும் வேறு எங்கும் தென்படாத உயரிய நிலையாகும். இந்நிகழ்வைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே
உள்ளங்கள் அமைதி அடைகின்றன
. (13:29)

A. Khaleel Ahmad
(Melapalayam)

எடுத்துரைக்கிறார்கள்: இணைவைப்பாளர்கள் அசுத்தமானவர்கள், தூய்மையற்றவர்கள், ஷர்ருல் பரிய்யா, (படைப்புகளிலேயே மிகவும் தீயவர்கள்), ஸுஃபஹாஃ, (அறிவீனர்கள்) மற்றும் ஷைத்தானின் சந்ததிகள் என்றும், அவர்களின் கடவுள்கள் வகூதுன்னார் (நரகத்தின் எரிபொருட்கள்) மற்றும் ஹஸபு ஜஹன்னம் (நரகத்தின் விறகுகள்) என்றும் திருக்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்ட போது, அபூதாலிப் அண்ணல் நபி (ஸல்) அவர்களை அழைத்து, என் சகோதரன் மகனே! உமது பழித்துரைத்தலால் சமுதாயத்தினர் கடுமையாகக் கோபமடைந்துள்ளனர். அவர்கள் உம்மையும் அழித்து, என்னையும் சேர்த்து அழித்துவிடும் நிலை வந்துவிட்டது. நீர் அவர்களின் அறிஞர்களை மதியீனர்கள் என்று கூறிவிட்டீர்; பெரியோர்களைச் ஷர்ருல் பரிய்யா (படைப்புகளிலேயே மிகவும் தீயவர்கள்) என்று கூறிவிட்டீர்; அவர்களுடைய மதிப்பிற்குரிய கடவுள்களுக்கு ஹஸபு ஜஹன்னம் (நரகத்தின் விறகுகள்) என்றும், வகூதுன்னார் (நரக நெருப்பின் எரிபொருட்கள்) என்றும் பெயரிட்டுள்ளீர்; பொதுப்படையாக அவர்கள் அனைவரையும் அசுத்தமானவர்கள், ஷைத்தானின் சந்ததிகள் மற்றும் தூய்மையற்றவர்கள் என்று முடிவு செய்துள்ளீர். நலன்விரும்பி என்ற முறையில் உமக்குக் கூறுகின்றேன், உமது நாவைக் கட்டுப்படுத்துவீராக! பழித்துப் பேசுவதிலிருந்து பின்வாங்குவீராக!; இல்லையெனில் சமுதாயத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றல் எனக்கு இல்லை என்று கூறினார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பதிலளிக்கும் போது கூறினார்கள்: பெரிய தந்தையே! இது வசவு மொழியல்ல; மாறாக, உண்மையின் வெளிப்பாடும், நிகழ்ந்ததை அதற்குரிய இடத்தில் தெளிவுபடுத்துவதும் ஆகும். இதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். இதன் மூலம் எனக்கு மரணம் வரினும், அம்மரணத்தை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கின்றேன். என் வாழ்வு இவ்வழியிலேயே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மரண பயத்தால் உண்மையை வெளிப்படுத்துவதிலிருந்து நான் (பின்வாங்கி) நின்றுவிட முடியாது. பெரிய தந்தையே! உங்களின் பலவீனத்தையும் சிரமத்தையும் குறித்து நீங்கள் கவலைப்பட்டால், என்னை உங்கள் அடைக்கலத்தில் வைத்திருப்பதிலிருந்து விலகிக்கொள்ளுங்கள். இறைவன் மீது ஆணையாக! எனக்கு உங்களின் தேவை எள்ளளவும் இல்லை. இறைக் கட்டளைகளைக் கொண்டு சேர்ப்பதிலிருந்து நான் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன். என் எஜமானனின் கட்டளைகள் எனக்கு என் உயிரை விட மேலானவை. இறைவன் மீது ஆணையாக! இவ்வழியில் நான் கொல்லப்பட்டாலும், மீண்டும் மீண்டும் உயிர்பெற்று வந்து எப்போதும் இவ்வழியிலேயே மரணித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்றே விரும்புகின்றேன். இது அச்சத்திற்குரிய இடமன்று; மாறாக, அவனது வழியில் துன்பங்களை ஏற்பதில் எனக்கு அளப்பரிய பேரின்பம் உள்ளது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த உரையை ஆற்றிக் கொண்டிருந்த போது, அன்னாரின் முகத்தில் உண்மையினாலும் ஒளியினாலும் நிறைந்த நெகிழ்ச்சி வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த உரையை நிறைவு செய்ததும், உண்மையின் ஒளியைக் கண்டு அபூதாலிபின் கண்கள் கட்டுப்பாடின்றி கண்ணீரைப் பொழிந்தன. அவர், உமது இந்த உயரிய நிலையை நான் அறியாதிருந்தேன்; நீர் வேறு ஒரு வண்ணத்திலும் வேறு ஒரு மேன்மையிலும் இருக்கின்றீர்! செல்வீராக! உமது பணியைத் தொடர்ந்து செய்வீராக! நான் உயிருடன் இருக்கும் வரை, எனக்கு ஆற்றல் இருக்கும் அளவுக்கு நான் உமக்கு உறுதுணையாக நிற்பேன் என்று கூறினார். அதே போன்று தாயிஃபிலிருந்து திரும்பிய போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இறைநம்பிக்கையின் ஒரு நிகழ்வும் உள்ளது. அன்னார் தாயிஃபின் தலைவர்களுக்குத் தப்லீஃக் செய்வதற்காகத் தன்னந்தனியாகப் புறப்பட்டுச் சென்றார்கள்; அத்தலைவர்களோ அநியாயத்தின் எல்லைக்கே சென்றனர். அங்கிருந்து திரும்பும் போது, வெளிப்படையில் பார்க்கையில், மக்காவிற்குள் நுழைவதற்கும் எவ்வித வழியும் தென்படவில்லை. அன்னாருடன் ஒரு தொண்டர் இருக்கிறார்; இனி என்ன நிகழுமோ? என்று அந்தத் தொண்டர் கவலையோடு இருக்கிறார். ஆனால் கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களுக்குத் தம் இறைவனின் மீது முழுமையான தவக்குல் இருக்கிறது. இந்நிகழ்வைக் குறிப்பிட்டு, அதே தொண்டர் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ்! மக்கத்தினர் தங்களை வெளியேற்றிவிட்ட நிலையில், இப்போது தாங்கள் எவ்வாறு மக்காவிற்குள் நுழைவீர்கள்? என்று பணிவுடன் வினவிய போது, மாநபி (ஸல்) அவர்கள் எத்தகைய கம்பீரமான தவக்குலுடன் பதிலளித்தார்கள் பாருங்கள்: ஸைதே! அல்லாஹ் நிச்சயமாக ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவதை நீர் காண்பீர்; அல்லாஹ் தன் மார்க்கத்திற்கு உதவியாளனாக இருக்கின்றான்; அவன் தன் நபியை வெற்றியடையச் செய்தே தீருவான் என்று கூறினார்கள்.

அதன்படியே மாநபி (ஸல்) அவர்கள் தம்மைத் தம் அடைக்கலத்தில் ஏற்று மக்காவிற்குள் நுழைவதற்கு ஏற்பாடு செய்யுமாறு குறைஷிகளின் தலைவர்களுக்குச் செய்தி அனுப்பினார்கள். அனைத்துத் தலைவர்களும் மறுத்துவிட்டனர்; இறுதியாக முத்இம் பின் அதீ எனும் கண்ணியமிக்க ஒரு தலைவர், பெருமானார் (ஸல்) அவர்களைத் தம் அடைக்கலத்தில் மக்காவிற்குள் நுழையச் செய்வதாக அறிவித்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தின் போது அன்னாருக்கு அல்லாஹ்வின் மீதிருந்த தவக்குலின் முன்மாதிரிகள் எவை? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஹிஜ்ரத் செய்ய அனுமதி கிடைத்த போது, அன்னார் (ஸல்), ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் தம் ஹிஜ்ரத் திட்டத்தைத் தெரிவித்து, அவர்களிடம் ஓர் உயிர்த் தியாகப் பணியை ஒப்படைத்தார்கள். அதாவது, அவர்கள் அன்று இரவு நபி பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய படுக்கையில், அன்னார் (ஸல்) போர்த்திக் கொள்ளும் அதே பச்சை நிற - அல்லது ஓர் அறிவிப்பின்படி சிவப்பு நிற - ஹஸ்ரமீ போர்வையைப் போர்த்திக் கொண்டு உறங்க வேண்டும் என்பதாகும். அது ஏமனின் போர்வையாகும். அந்தப் பகுதியின் காரணமாக அது ஹஸ்ரமீ என்று அழைக்கப்பட்டது. எவ்வாறாயினும், பெருமானார் (ஸல்) அவர்கள் தாம் போர்த்திக் கொள்ளும் அப்போர்வையைப் போர்த்திக் கொண்டு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உறங்க வேண்டும். தம் உயிரைத் தியாகம் செய்யத் துணிந்த, தம்மை மாய்த்துக் கொண்ட அந்தத் தொண்டருக்கு இறைவனின் ஆதரவும், உதவியும் கிடைக்கும் என்ற உறுதியை அளித்து, கவலைப்படாதீர்! மிகவும் நிம்மதியாக என் படுக்கையில் உறங்குவீர்; எதிரிகளால் உமது ஒரு தலைமுடியைக் கூட அசைக்க முடியாது என்று கூறினார்கள்.

மேலும், உண்மையாளராகவும், நம்பகமானவராகவும் திகழ்ந்த இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு, மக்கத்தினர் தம்மிடம் ஒப்படைத்திருந்த அமானிதப் பொருட்களைத் திருப்பித் தர வேண்டும் என்பதைப் பற்றியும் கவலையும், பொறுப்புணர்வும் இருந்ததால், மக்களின் அமானிதப் பொருட்களைத் திருப்பிச் செலுத்திவிட்டு, பிறகு என் பின்னே அங்கே நீர் வந்து சேர்வீராக! என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

அதன் பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் இல்லத்திலிருந்து வெளியே வருகை தந்தார்கள். அப்போது மக்கத்துக் காஃபிர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் - அவர்களின் கண்களில் இரத்தம் வடிவது போல் கொடூரம் நிறைந்திருந்தது - கைகளில் வாள்களை ஏந்தியவாறு, சரியாக அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இல்லத்திற்கு வெளியே மிக விழிப்புடன் காவல் காத்துக் கொண்டிருந்தனர். இரவு ஆழமானதும் ஒரே தாக்குதலில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கதையை முடித்துவிட வேண்டும் என்பதே அவர்களின் திட்டமாக இருந்தது - நவூதுபில்லாஹ்! மேலும் அவர்களின் தலைவனாகச் செயல்பட்ட அபூஜஹ்ல் மிகுந்த அகந்தையோடும் ஏளனத்தோடும் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தான். முஹம்மது கூறுகின்றார்: நீங்கள் அவருடைய விஷயத்தில் அவரைப் பின்பற்றினால் நீங்கள் அரபிகளுக்கும், அரபி அல்லாதவர்களுக்கும் அரசர்களாகிவிடுவீர்களாம்; பின்னர் மரணத்திற்குப் பிறகு நீங்கள் உயிர்ப்பிக்கப்படும் போது, உங்களுக்கு ஜோர்டான் தோட்டங்களைப் போன்ற சோலைகள் அமைக்கப்படுமாம்; நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், உங்களிடையே படுகொலை நடக்குமாம் என்று சொல்லிக் கொண்டிருந்தான் என்றும் முஹம்மது கூறுகின்றார் என்று அவன் கூறினான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் புறப்படுவதற்காக இல்லத்திலிருந்து வெளியே வந்து, ஆம்! நான் அவ்வாறே கூறுகின்றேன் என்று கூறியவாறு, சூரா யாஸீனின் இந்த வசனத்தை ஓதிக்கொண்டே வந்தார்கள்:

இதன் மொழியாக்கம் வருமாறு: யா ஸய்யிது! தலைவரே! ஞானமிக்க திருக்குர்ஆன் மீது ஆணையாக! நிச்சயமாக நீர் இறைத்தூதர்களில் ஒருவராகவும்,

நேரான பாதையில் செல்பவராகவும் இருக்கின்றீர். இது வல்லோனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாகிய இறைவனால் அருளப்பட்டதாகும்; தம் மூதாதையர்கள் எச்சரிக்கப்படாமல், அறியாமையில் மூழ்கிக்கிடந்த ஒரு சமுதாயத்தை நீர் எச்சரிப்பதற்காகவே இது இறக்கப்பட்டது. ஏனெனில், அவர்களில் பெரும்பாலார் மீது (இறைவனின்) வாக்கு மெய்யாகிவிட்டது; எனவே அவர்கள் ஈமான் கொள்ளமாட்டார்கள். நிச்சயமாக நாம் அவர்களின் கழுத்துகளில் விலங்குகளை மாட்டியுள்ளோம்; அவை அவர்களின் தாடைகள் வரை உள்ளன; அதனால் அவர்கள் தலையைத் தூக்கியவர்களாய் இருக்கின்றனர். மேலும் நாம் அவர்களுக்கு முன்னாலும் ஒரு தடையை அமைத்து, அவர்களுக்குப் பின்னாலும் ஒரு தடையை அமைத்து, அவர்களை மூடிவிட்டோம்; எனவே அவர்களால் பார்க்க முடியாது.

ஹஸ்ரத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களின் தலைகளில் மண்ணை தூவியவாறு, இவற்றை ஓதியவாறே அவர்களுக்கு முன்பாகச் கடந்து சென்று விட்டார்கள். ஆனால் இறைவனின் வல்லமையினால், அன்னார் செல்லும் போது, யாருக்கும் தென்படவில்லை! மாறாக, அந்த மக்கள் அவ்வப்போது உள்ளே எட்டிப் பார்த்து, ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் படுக்கையில்தான் இருக்கின்றார்கள் என்று திருப்தியடைந்து கொள்வார்கள்.

ஹஸ்ரத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தையும், அவர்களின் இந்தத் தவக்குலையும் எடுத்துரைத்தவாறு வரலாற்றுச் சான்றுகளுடன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு விவரித்துள்ளார்கள்:

ஹஸ்ரத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஹிஜ்ரத் செய்வதற்கான கட்டளை கிடைத்த போது, அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு, மக்காவிலிருந்து சுமார் ஆறு, ஏழு மைல் தொலைவிலுள்ள சவ்ர் மலையை நோக்கிச் சென்றார்கள்; அந்த மலையின் உச்சியிலிருந்த ஒரு குகையில் மறைந்து அமர்ந்து கொண்டார்கள்.

மறுநாள் காலையில், ஹஸ்ரத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் இல்லத்தில் இல்லாததையும், அனைத்துக் கடுங்காவலையும் மீறி ஹஸ்ரத் முஹம்மத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெற்றிகரமாக வெளியேறி விட்டதையும் காஃபிர்கள் கண்ட போது, உடனே அன்னாரைத் தேடிப் புறப்பட்டார்கள். காலடித் தடங்களைக் கண்டறிவதில் பெரும் தேர்ச்சி பெற்ற மக்காவின் சிறந்த தடம் பிடிப்பாளர்கள் சிலரைத் தங்களோடு அழைத்துச் சென்றனர். அத்தடம் பிடிப்பாளர்கள் அவர்களை சவ்ர் மலை வரை அழைத்துச் சென்று, ஹஸ்ரத் முஹம்மத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருந்தால் இங்குதான் இருக்க வேண்டும்; இதற்கு அப்பால் வேறெங்கும் காலடித் தடங்கள் காணப்படவில்லை என்று கூறினர்.

அந்நேரத்தின் தன்மை எத்தகையது என்றால், பகைவர்கள் குகையின் மிக அருகே முகப்பிலேயே நின்றுகொண்டிருந்தனர். அதற்குள் எட்டிப்பார்ப்பது சிரமமாக இருக்கும் வகையில் அந்தக் குகையின் நுழைவாயில் குறுகலானதாக இருக்கவில்லை; மாறாக, அது ஒரு பரந்த வாயிலைக் கொண்ட திறந்த குகையாகவே இருந்தது. அதற்குள் எட்டிப்பார்த்து யாரேனும் உள்ளே அமர்ந்திருக்கின்றார்களா இல்லையா? என்பதை மிகவும் எளிதாகக் கண்டறிந்துவிட முடியும். ஆனால் அத்தகைய சூழ்நிலையிலும் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படவில்லை. இன்னும் சொல்வதாயின், அன்னாரின் புனிதப் பேராற்றலின் பரக்கத்தினால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உள்ளமும் உறுதியாக இருக்கிறது. அவர்கள் மூஸா (அலை) அவர்களின் தோழர்களைப் போல் நாம் பிடிக்கப்பட்டோம் என்று கூறவில்லை; மாறாக, அவர்கள் ஏதேனும் கூறினார்கள் என்றால், யா ரஸூல்லல்லாஹ்! எதிரி எவ்வளவு அருகில் வந்துவிட்டான்! என்றால், அவன் சற்றே தன் பார்வையைக் கீழ்நோக்கினாலும் நம்மைக் காண முடியும் என்று மட்டுமே கூறினார்கள்.

ஆனால், ஹஸ்ரத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூபக்ரே! அமைதியாக இருங்கள்; நாம் இந்த நேரத்தில் இருவர் அல்லர்; மாறாக, நம்மோடு மூன்றாவதாக அல்லாஹ்வும் இருக்கின்றான். பிறகு அவர்களால் எவ்வாறு நம்மைக் காண முடியும்? என்று கூறினார்கள். ஆக, அதன்படியே நிகழ்ந்தது; எதிரிகள் குகையின் முகப்பு வரை வந்து சேர்ந்தபோதிலும், முன் நகர்ந்து எட்டிப் பார்ப்பதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் அங்கிருந்தபடியே புலம்பிக் கொண்டும் அழிவைப் பற்றிப் பிதற்றிக் கொண்டும் வீண் வார்த்தைகளைப் பேசியவாறே திரும்பிச் சென்றுவிட்டனர்.

சுருங்கக் கூறின், இந்நிகழ்வின் ஒரு கோணம் என்னவெனில், மூஸா (அலை) அவர்களின் தோழர்கள் பதற்றமடைந்து, மூஸாவே! நாமோ அகப்பட்டுக் கொண்டோம் என்று கூறினர். அதாவது, அவர்கள் தம்முடன் மூஸா (அலை) அவர்களையும் சேர்த்துக் கொண்டு, இப்பொழுது தாங்கள் அனைவரும் ஃபிர்அவ்னின் பிடியில் சிக்கப்போகின்றோம் என்று நினைத்தனர். ஆனால் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களின் தவக்குல், அவர்களின் தோழர் மீதும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அவரது நாவிலிருந்தும் கூட, நாம் அகப்பட்டுக் கொண்டோம் என்ற வார்த்தைகள் வரவில்லை! மாறாக அவர், எதிரிகள் மிகவும் அருகில் வந்துவிட்டார்கள்; அவர்கள் நம்மைப் பார்க்க விரும்பினால் பார்த்துவிட முடியும் என்று மட்டுமே கூறினார். எனினும் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த ஐயத்தை அல்லது எண்ணத்தைக் கூடச் சகித்துக் கொள்ளாமல், அவ்வாறு நினைக்காதீர்; நாம் இந்த நேரத்தில் இருவர் அல்லர்; மாறாக, நம்மோடு மற்றொருவனும் இருக்கின்றான்; அவன் நம் இறைவன் ஆவான் என்று கூறினார்கள். ஹிஜ்ரத் நிகழ்வையும், ஹஸ்ரத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களின் தவக்குலையும் வீரத்தையும் குறித்துக் குறிப்பிடுகையில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்கள் முற்றுகையிடப்பட்ட அந்த நெருக்கடியான நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் உண்மைத்துவம் வெளிப்பட்டது. சிலரின் கருத்து, அவர்களை நாடு கடத்த வேண்டும் என்பதாக இருந்தபோதிலும், அவர்களின் அசல் திட்டம் கொலை செய்வதாகவே இருந்தது. இத்தகைய சூழ்நிலையில்தான் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் தமது உண்மைத்துவம் மற்றும் நன்றியுணர்வுக்கான எத்தகைய முன்மாதிரியை வெளிப்படுத்தினார்கள் என்றால், உலகம் இருக்கும் நாள் வரை அது ஒரு முன்மாதிரியாகத் திகழும். அந்த இன்னலான தருணத்தில் ஹஸ்ரத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தத் தேர்ந்தெடுத்தலே, ஹஸ்ரத் அபூ பக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் சிறப்பிற்கும் உயரிய நன்றியுணர்விற்கும் ஒரு வலுவான சான்றாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் தொடர்பாகவும் நற்பண்புகளை எடுத்துரைக்கிறார்கள்: அதே போன்று, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தேர்வும் அமைந்திருந்தது. அந்நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்களிடம் எழுபது, எண்பது நபித்தோழர்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் அன்னாரிடமே இருந்தார்கள்; எனினும் அன்னார் (ஸல்) இவர்கள் அனைவரிலிருந்தும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையே தேர்ந்தெடுத்தார்கள். இதிலுள்ள மறைபொருள் என்ன? என்ன ரகசியம் மறைந்துள்ளது? விஷயம் என்னவெனில், நபி இறைவனின் பார்வையால் பார்க்கின்றார்; அவரது புரிதல் இறைவனிடமிருந்தே வருகின்றது. எனவேதான், அல்லாஹ் தன் கஷ்ஃப் (ஆன்மிகக் காட்சி) மற்றும் இல்ஹாம் மூலமாக ஹஸ்ரத் ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு, இப்பணிக்கு மிகச் சிறந்தவரும் பொருத்தமானவரும் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களே ஆவார்கள் என்பதை அறிவித்திருந்தான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மிகக் கடினமான தருணத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். அது பயங்கரமான சோதனைக் காலமாகும். ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களுக்கு இத்தகையதொரு சூழ்நிலை ஏற்பட்ட போது, அவர்களின் சீடர்கள் அவர்களை விட்டுவிட்டு ஓடிவிட்டனர்; ஒருவன் அவர்கள் முன்னிலையிலேயே அவர்களை சபிக்கவும் செய்தான். ஆனால் ஸஹாபா பெருமக்களில் ஒவ்வொருவரும் முழுமையான நன்றியுணர்வின் முன்மாதிரியை வெளிப்படுத்தினர்.

சுருங்கக் கூறின், ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் நபிநாதர் (ஸல்) அவர்களுக்கு முழுமையாக உறுதுணையாக இருந்தார்கள்; சவ்ர் குகை என்று அழைக்கப்படும் ஒரு குகையில் அவர்கள் இருவரும் சென்று மறைந்திருந்தனர். தீய காஃபிர்கள் மாநபி (ஸல்) அவர்களைத் துன்புறுத்துவதற்கான திட்டங்களைத் தீட்டிய பிறகு, தேடிக் கொண்டே அந்தக் குகை வரை வந்து சேர்ந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள், இப்பொழுதோ இவர்கள்

முற்றிலும் நமது தலைக்கு அருகில் வந்துவிட்டனர்; யாரேனும் சற்றே கீழ்நோக்கிப் பார்த்தால் நம்மைப் பார்த்துவிடுவார். நாம் பிடிபடுவோம் என்று பணிவுடன் கூறினார்கள். அந்நேரத்தில் அண்ணல் நபி (ஸல்)அவர்கள், சற்றும் கவலைப்படாதீர்! அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான் என்று கூறினார்கள். இந்தச் சொல்லைச் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களைத் தம்மோடு இணைத்துக் கொள்கின்றார்கள்.

அல்லாஹ் ஒரு தட்டில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை வைத்தான்; மறு தட்டில் ஹஸ்ரத் ஸித்தீக் (ரலி) அவர்களை வைத்தான். அந்நேரத்தில் இருவருமே சோதனையில் இருக்கின்றனர்; ஏனெனில், இங்கிருந்துதான் ஒன்று இஸ்லாத்தின் அடித்தளம் அமையப் போகின்றது அல்லது அது முடிவுக்கு வரப் போகின்றது! எதிரிகள் குகையின் முகப்பில் நின்று கொண்டிருக்கின்றனர்; பலவிதமான கருத்துகளைப் பேசிக் கொண்டிருக்கின்றனர். சிலர், இக்குகையை சோதனைப் போடுங்கள், ஏனெனில் காலடித் தடம் இங்கு வரை வந்துதான் முடிகின்றது என்று கூறுகின்றனர். ஆனால் அவர்களில் சிலர், இங்கே மனிதன் எவ்வாறு நுழைய முடியும்? சிலந்தி வலை பின்னியிருக்கின்றது, புறா முட்டையிட்டுள்ளது என்று கூறுகின்றனர்.

இத்தகைய பேச்சுகளின் ஒலிகள் உள்ளே கேட்கின்றன; அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மிகத் தெளிவாக அவற்றைச் செவிமடுக்கின்றார்கள். முடிவு கட்ட வேண்டும் என்ற நிலையில் பகைவர்கள் வந்துள்ளனர். வெறிபிடித்தவர்களைப் போல் திரண்டு வந்துள்ளனர்; ஆனால் மாநபி (ஸல்) அவர்களின் இணையற்ற வீரத்தைப் பாருங்கள்! எதிரி தலைமாட்டில் நிற்கின்றான்; பெருமானார் (ஸல்) அவர்கள் தம் உண்மையான தோழரான ஹஸ்ரத் ஸித்தீக் (ரலி) அவர்களிடம் கூறுகின்றார்கள்: இந்தச் சொற்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் நாவினாலேயே கூறினார்கள் என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன; ஏனெனில், இவற்றைக் கூற ஓசை தேவை. வெறும் செய்கை மூலம் வேலை நடக்காது.

வெளியே எதிரிகள் ஆலோசனை செய்து கொண்டிருக்கின்றனர்; உள்ளே குகையிலோ தலைவரும் தொண்டரும் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். எதிரிகள் ஓசையைக் கேட்டுவிடுவார்களோ என்று கவலை கொள்ளவில்லை. இது அல்லாஹ்வின் மீதான முழுமையான ஈமானுக்கும் இறைஞானத்திற்கும் சான்றாகும். இறைவனின் வாக்குறுதிகள் மீது அவர்களுக்கு இருந்த முழு நம்பிக்கையாகும்.

இந்த ஹிஜ்ரத் பயணத்தில் மாநபி (ஸல்) அவர்களின் தவக்குல் தென்படும் இன்னும் பல நிகழ்வுகள் உள்ளன; அவை இனிவரும் காலத்தில் விவரிக்கப்படும் - இன்ஷா அல்லாஹ்! அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் வ பாரிக் வ ஸல்லிம் இன்னக்க ஹமீதும் மஜீத்.

தமிழாக்கம்
முரப்பி
அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * * * * * * *

8-ம் பக்கத் தொடர்ச்சி (குத்பா பேருரை 4.9.26).....

கணக்கு வழக்கு பார்த்து, செக்ரட்டரி மால் சாஹிப்பைத் தொடர்புகொண்டு தவறாமல் சந்தா செலுத்தி விடுவார்; செக்ரட்டரி மாலின் வீட்டிற்கே சென்று வழங்கிவிடுவார். தினசரி தவறாமல் தர்மம் செய்வார்; ஒவ்வொரு மாதமும் ஆடு சதக்காவாக கொடுப்பார். பள்ளிவாசல் மற்றும் பிற சந்தா திட்டங்களில் முதலாவதாகத் தனது பங்களிப்பைச் வழங்குவார். வஸிய்யத் அமைப்பில் அவரும் இணைந்திருந்தார்; குடும்பத்தினர் அனைவரையும் வஸிய்யத் அமைப்பில் இணையச் செய்தார். (தமது) பணியாளர்களை மிகவும் அக்கறையுடன் பார்த்துக் கொள்வார்; அவர்களுக்கு நிதித் தேவைகள் ஏதேனும் ஏற்பட்டாலோ அல்லது யாரேனும் நோயுற்றாலோ அதை நிவர்த்தி செய்வார்; அவர்களின் குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்தி, அவர்களின் செலவுகளைப் பொறுப்பேற்க முயற்சிப்பார்.'

வொர்க் ஷாப் வைத்திருப்பவர்கள் பொதுவாகச் சம்பாதிப்பதிலேயே கவனம் செலுத்துவார்கள்; ஆனால், ஏதேனும் பயணி ஒருவருடைய வாகனம் பழுதடைந்துவிட்டால் மிகக் குறைந்த கட்டணத்திலேயே பழுதுநீக்கித் தருவார்; சில நேரங்களில் சிலருக்கு இலவசமாகவே செய்து கொடுப்பார். எவ்வளவு வேலைப்பளு இருந்தாலும், ஜமாஅத் நிகழ்ச்சிகளுக்கே முன்னுரிமை அளிப்பார்.

மண்டி பஹாவுத்தீன் மாவட்ட அமீர் சாஹிப் கூறுகையில்; 'ஷஹீத் மர்ஹூம் அவர்கள் ஷஹாதத்தின் போது மண்டி பஹாவுத்தீன் நகர ஜமாஅத்தினுடைய துணைத் தலைவராகவும், செக்ரட்டரி ஜாயிதாத் ஆகவும், அன்ஸாருல்லாஹ்வின் நாயிப் ஸயீமாகவும், அன்ஸாருல்லாஹ்வின் முன்தஸிம் மாலாகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றிருந்தார்.'

பல பொறுப்புகள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. பள்ளிவாசலின் பராமரிப்பு பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது; அதன் சாவியும் அவரிடமே இருந்தது. ஒவ்வொரு தொழுகைக்கும் சென்று பள்ளிவாசலைத் திறப்பார். வியாபாரிகள் பொதுவாக இந்த விஷயங்களில் கவனம் செலுத்துவதில்லை; ஆனால் இவர் ஒவ்வொரு தொழுகை நேரத்திலும் சென்று பள்ளிவாசலைத் திறப்பார்.

ஜமாஅத்தின் முரப்பி முஸஃப்பர் மஹ்மூத் சாஹிப் கூறுகிறார்; 'தினமும் வொர்க் ஷாப்பிற்கு வருவதற்கு முன்பாக இரண்டு ரக்அத் நஃபில் தொழுவதாக மர்ஹூம் என்னிடம் கூறியிருந்தார்.

ஷஹீத் மர்ஹூமின் பின்விட்டுச் சென்றவர்களுள், மனைவி மதிப்பிற்குரிய நவீதா ஸஃப்தர் சாஹிபாவைத் தவிர, காம்ரான் ஸஃப்தர், லுக்மான் ஸஃப்தர் ஆகிய இரு திருமணமான மகன்களும் உள்ளனர்.

அல்லாஹ் ஷஹீத் மர்ஹூமின் அந்தஸ்த உயர்த்துவானாக! ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸில் உயரிய இடத்தை வழங்குவானாக! குடும்பத்தினர் அனைவருக்கும் அழகிய பொறுமையை வழங்குவானாக! அவர்களுக்கு உதவியாளனாகவும் பாதுகாப்பாளனாகவும் இருப்பானாக!

இரண்டாவது குறிப்பு, அன்பிற்குரிய அமத்துல் அஸீஸ் ஸாஹிபா அவர்களைப் பற்றியதாகும். கடந்த நாட்களில் 62 வயதில் மரணமடைந்துள்ளார்கள். அவர்கள் சில காலமாகக் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அல்லாஹ்வின் அருளால் அவர்கள் வஸிய்யத் திட்டத்தில் இணைந்தவராக இருந்தார்கள். மர்ஹூமா அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸையிதா உம்மே தாஹிர் ஸாஹிபா ஆகியோரின் மகள் வழி பேத்தியும், ஸாஹிப்ஸாதி அமத்துல் ஹக்கீம் ஸாஹிபா மற்றும் மதிப்பிற்குரிய ஸையித் தாவூத் முஸஃப்பர் ஷாஹ் ஸாஹிப் ஆகியோரின் மகளும் ஆவார்கள். ஸையித் தாவூத் முஸஃப்ஃபர் சாஹிப் அவர்கள் உம்மே தாஹிர் அவர்களின் சகோதரரின் மகனும், ஸையித் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் அவர்களின் மகனும் ஆவார். மர்ஹூமா அவர்கள் எனது தாயின் சகோதரி மகளும், எனது மனைவியின் இளைய சகோதரியும் ஆவார்கள்.

அவர்களின் நிக்காஹ்வை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் காலித் ஸஃபர் ஸாஹிப் என்பவருடன் நடத்தி வைத்தார்கள். காலித் ஸஃபர் சாஹிப் அவர்களின் முதல் மனைவி இறந்துவிட்டதால், மர்ஹூமா அமத்துல் அஸீஸ் ஸாஹிபா அவர்களுடன் நடந்தது இரண்டாவது திருமணமாகும். அல்லாஹ் அமத்துல் அஸீஸ் ஸாஹிபா அவர்களுக்கு இரண்டு மகன்களை வழங்கினான்; இரு மகன்களும் மிகவும் திறமைசாலிகள். சட்டம் பயின்ற முதல் மகனான மஹ்மூத் இஃப்திகார் ஸாஹிப், வாழ்வை அர்ப்பணித்தவராக ரப்வாவில் நஸாரத் உமூரே ஆம்மாவில் பணியாற்றுகிறார்; அவர் திறமையான வழக்கறிஞரும் ஆவார். இரண்டாவது மகன் ஹாஷிர் அஹ்மத் ஸாஹிப் ஜெர்மனியில் உயர்கல்வி பயின்றுள்ளார். இவ்விரு மகன்களும் தங்களால் இயன்றவரை தமது தாயாருக்குச் சிறப்பாகப் பணிவிடை செய்துள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் நற்கூலி வழங்கி, எதிர்காலத்திலும் தாயின் துஆக்களுக்கு உரியவர்களாகவும், நன்மைகளில் நிலைத்திருப்பவர்களாகவும் ஆக்குவானாக!

அமத்துல் அஸீஸ் ஸாஹிபா அவர்களின் வாழ்க்கை மிகுந்த கஷ்டத்துடன் கழிந்தபோதிலும், அவர்கள் மிகுந்த பொறுமையுடன் வாழ்க்கையைக் கழித்தார்கள். அவர்களைப் போன்ற பொறுமையாளர் ஒருவரை நான் அரிதாகவே கண்டுள்ளேன்.

அமத்துல் அஸீஸ் ஸாஹிபா அவர்களின் சகோதரர் ஸையித் காலித் அஹ்மது ஷாஹ் ஸாஹிப் கூறுகையில்: 'எங்களது இந்த சகோதரி பெற்றோருக்குப் பெரிதும் பணிவிடை செய்தார்; தாயாரின் மறைவுக்குப் பிறகு தந்தைக்கும் மிகுந்த பணிவிடை செய்தார். இரக்க குணத்திலும், ஏழைகளுக்கு உதவுவதிலும் எங்களது தாயாரின் வழியைப் பின்பற்றி நடந்தார். கிலாஃபத்தின் மீதான அன்னாருடைய அன்பும், கொள்கைப் பிடிப்பும் ஈடு இணையற்றது; பிள்ளைகளுக்கும் சிறந்த முறையில் தர்பிய்யத் வழங்கினார்.

அவருடைய ஒரு சிறப்பம்சம் என்னவென்றால், யாரைப் பற்றியும் தவறாகப் பேசவும் மாட்டார்; பேசக் கேட்கவும் மாட்டார். தமது உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருந்தார்; எவருடைய துன்பத்தையும் அவர்களால் சகித்துக்கொள்ள முடியாது. ஆனால், தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளும் மனதிடமும் பொறுமையும் அவர்களிடம் அதிகமாக இருந்தது.'

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, அவர்கள் மிகுந்த பொறுமையைக் கடைப்பிடித்தார்கள். சண்டை சச்சரவுகளிலிருந்து தப்பிப்பதற்காக உலகின் அனாவசியமான குழப்பங்களிலிருந்தும், பிரச்சனைகளிலிருந்தும் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டார்கள். மக்கள் அவர்களைப் பற்றித் தவறான பேச்சுக்களையும் கருத்துக்களையும் முன்வைத்த போதிலும், அவர்கள் எவருடனும் சண்டையிடவில்லை. - ஆங்காங்கே சில எதிர்ப்புகள் சிறியளவில் நடந்துகொண்டுதானே இருக்கின்றன. - எவ்வாறாயினும், அவர்கள் எவருடனும் சண்டையிடவுமில்லை; பதிலடி கொடுக்கவுமில்லை; எவருடைய மனதையும் புண்படுத்தவில்லை. மற்றவர்களின் துன்பங்களை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது; அவர்களுக்கு உதவுவதற்கு துடித்துக்கொண்டிருப்பார்கள். சிறு குழந்தைகளிடம் மிகுந்த அன்பு காட்டுவார்கள்.

அவர்கள் சுயமரியாதை மிக்கவராக இருந்தார்கள்; தமது தேவைகளைத் தமது உள்ளத்திலேயே மறைத்து வைப்பார்கள், எவரிடமும் வெளிப்படுத்த மாட்டார்கள். அல்லாஹ் மீது அசாதாரணமான நம்பிக்கை வைத்திருந்தார்கள்; அல்லாஹ்வும் அன்னாருடைய சுயமரியாதையைக் காப்பாற்றி, மறைமுகமான வழிகளில் அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தான்.

மர்ஹூமாவின் சகோதரியும், மர்ஹூம் டாக்டர் களீர் முஜ்தபா அவர்களின் மனைவியுமான அமத்துர் ரவூஃப் ஸாஹிபா கூறுகிறார்கள்: 'எங்கள் சகோதரி அமைதியான குணமும், எவருக்கும் தீங்கு நினைக்காத பொறுமைசாலியும், மிகுந்த சுயமரியாதையும் கொண்டவராக இருந்தார். ஏழைகள் மீது அக்கறை காட்டுபவராகவும், அதிகளவில் தான தர்மங்களைச் செய்பவராகவும் இருந்தார். கிலாஃபத்திற்கு அசாதாரணமான மரியாதையும் கண்ணியமும் அளிப்பார் என்று கூறியுள்ளார்.

நான் ஏதேனும் ஒரு விஷயத்தைக் கூறிவிட்டால், அதை உடனடியாக ஏற்றுக்கொள்வார். அவர்கள் நோயுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது, தாம் பிழைக்க முடியாத கடினமான ஒரு நோயால் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்திருந்தார்கள்; மருத்துவமனைக்குச் செல்வதால் பயனில்லை என்றும் கருதினார்கள். ஆனால், நீங்கள் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுங்கள் என நான் கூறியதும் - ஆரம்பத்தில் மறுத்த வந்த அவர்கள் நான் கூறியதும் - உடனடியாக ஏற்றுக்கொண்டு மருத்துவமனை சென்று சிகிச்சையும் பெற்றுக் கொண்டார்கள்.

அவர்களின் மகன் மஹ்மூத் இஃப்திகார் இவ்வாறு கூறுகிறார்: 'தாயார் எனக்கு அறிவுரை கூறும்போது, 'நீ ஹஸ்ரத் மஸீஹ் (மவ்வூது) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவன்; எனவே, ஜமாஅத்திற்குச் தொண்டாற்ற வேண்டிய பொறுப்பு உனக்கு இரு மட்ங்கு உள்ளது' என்று கூறுவார்கள். மேலும், ஐந்தாவது கிலாஃபத்தின் ஆரம்ப காலத்தில் நாங்கள் சிறு குழந்தைகளாக இருந்தபோதே, கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு கடிதம் எழுதுமாறு எங்கள் இருவரையும் உடனடியாய் எழுத வைத்தார்கள்; தொடர்ந்து தவறாமல் கடிதம் எழுதுமாறு அறிவுரையும் வழங்குவார்கள். தொழுகையை தொழுமாறும், குத்பாவையும் தவறாமல் கேட்குமாறும் எப்போதும் வலியுறுத்துவார்கள். ஜமாஅத் அமைப்பு மீது அவர்களுக்கு மிகுந்த தன்மானம் இருந்தது. (ஜமாஅத்) அமைப்பிற்கு எதிராகப் பேசுவதையோ, விமர்சிப்பதையோ அவர்களால் ஒருபோதும் தாங்கிக்கொள்ள முடியாது.

அவர்களின் மகன் மேலும் கூறுகிறார்: 'தமது பெற்றோரின் வழித்தோன்றல்களில் யாரேனும் வாழ்வை அர்ப்பணித்தால் தாயாருக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும். வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு ஒருபோதும் நிதி நெருக்கடி ஏற்படுவதில்லை என்று கூறுவார்.

தமது இரு மகன்களும் வக்ஃப் செய்ய வேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாக இருந்தது. அதில் ஒருவர் வக்ஃப் செய்துவிட்டார்.

மகன் கூறுகிறார்: நான் வக்ஃப் செய்த போது, இப்போது நீ வக்ஃப் செய்துவிட்டாய்; ஆனால் அதை நன்கு நிறைவேற்ற வேண்டும் என்று அறிவுரை கூறினார்கள். பிறகு எனக்குப் பதவி உயர்வு கிடைத்து நாயிப் நாஸிராக நியமிக்கப்பட்ட போது, இதற்காக எந்தப் பெருமையும் அடைந்துவிடக் கூடாது; மாறாக, பணிவோடு செயல்பட வேண்டும் என்று கூறினார்கள்.

மகன் மேலும் கூறுகிறார்: அலுவலகப் பணி விஷயத்தில் எனக்காக அதிகமாக துஆக்களைச் செய்வார்கள். ஜமாஅத்தின் நிலவரங்களைப் பற்றி அவ்வப்போது விசாரித்துக் கொண்டிருப்பார்கள். வெள்ளிக்கிழமைகளில் நலம் விசாரிப்பார்கள்; எனக்கு ஏதேனும் வேலை இருந்தால், என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்பார்கள். நான் இப்போது ஜமாஅத் வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன் என்று கூறினால், சரி! முதலில் உனது ஜமாஅத் வேலையை முடி; பிறகு எனது இந்த வேலையைச் செய்து கொடு என்பார்கள். தம்மை விடவும் பிறரைப் பற்றிய கவலையே அவர்களுக்கு அதிகமாக இருந்தது; அவர்களின் தேவைகளைக் கவனித்துக் கொள்வார்கள். யாராவது உதவி கேட்டால் தாயார் கண்டிப்பாக அவர்களுக்கு உதவுவார்கள். அவர்களிடம் சகிப்புத்தன்மையும், பொறுமையும் அதிகமாக இருந்தது. தமது சிரமங்களைப் பொறுத்துக் கொள்வார்கள், ஆனால் மற்றவர்களின் சிரமங்களை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது. எவருக்கும் எந்தச் சிரமமும் ஏற்படக் கூடாது என்று விரும்புவார்கள்; அத்தகையவர்களின் சிரமங்களைப் போக்குவதிலேயே முனைப்பாக இருப்பார்கள்.

தமது சகோதர சகோதரிகளிடமும், அவர்களின் பிள்ளைகளிடமும், எனது தந்தையின் முதல் மனைவியின் பிள்ளைகளிடமும் மிகுந்த அன்பும் பாசமும் கொண்ட உறவைப் பேணினார்கள்; எப்போதும் அவர்களைக் கவனித்துக் கொள்வார்கள். 'நீங்கள் எப்போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்; இரு தாய்மார்களின் பிள்ளைகளான நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக, ஒரே உயிராக வாழ வேண்டும்; சண்டை சச்சரவு செய்யவே கூடாது' என்று எங்களுக்குக் கூறுவார்கள். எனது தந்தையின் முதல் மனைவியின் பிள்ளைகளுக்கும் எங்களுக்கும் இடையே எந்தவொரு பாகுபாடும் ஏற்படும் வகையில் அவர்கள் ஒருபோதும் பேசியதேயில்லை; மாறாக, எப்போதும் அன்போடும், பாசத்தோடும் வாழவே அறிவுறுத்தினார்கள்.'

நானும் அவர்களைக் கண்டுள்ளேன். தமது கணவரின் முதல் மனைவி சிறிய குழந்தைகளை விட்டுவிட்டு இறந்துவிட்ட நிலையில், அந்த பிள்ளைகள் விஷயத்தில் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டினார்கள். அவர்களைத் தனது சொந்தப் பிள்ளைகளைப் போலவே கவனித்துக் கொண்டார்கள்; வாய்ப்புகளுக்கும் சூழல்களுக்கும் ஏற்ப, அவர்களுக்காக என்னென்ன செய்ய முடியுமோ அவை அனைத்தையும் செய்தார்கள்.

அவர்களின் மகன் மேலும் கூறுகிறார்: 'எங்கள் சிறுவயதில் எங்களைப் பற்றி அவர்களுக்கு இருந்த மிகப் பெரிய கவலை, நாங்கள் திருக்குர்ஆனை ஓதி முடிக்க வேண்டும் என்பதேயாகும். அதற்காக எங்களைத் தவறாமல் திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்கும் ஆசிரியரிடம் அழைத்துச் சென்று விட்டுவிட்டு, மீண்டும் அழைத்து வருவார்கள். தொழுகையை உரிய நேரத்தில் தொழுவதில் கவனம் செலுத்தச் செய்வார்கள். தமது பெற்றோரைப் பற்றி குறிப்பிடும் போது, அவர்களின் தொண்டுகளைப் பற்றி அதிகமாகப் பேசுவார்கள். 'அந்தோ! அவர்கள் உயிரோடு இருந்திருக்கக் கூடாதா! அவர்கள் எவ்வளவு கடினமான சூழலில் வாழ்ந்தார்கள்! ஆனால் அதனுடன் ஒப்பிடும்போது இன்று நமது சூழ்நிலைகள் எவ்வளவோ சிறப்பாகவும் வசதியாகவும் உள்ளன!' என்றும் கூறுவார்கள். தமது பெற்றோரின் பணியாளர்களுக்கும் மிகுதியாகப் பணிவிடை செய்து, நன்றியுணர்வுடன் நடந்துகொள்வார்கள்.

மேலும், எங்களுக்கு என்ன அறிவுரை கூறினார்களோ, அதன்படி தாமும் செயல்பட்டார்கள். பெரியார்களின் அறிவுரை மிக நிகழ்வுகளை எங்களுக்குச் சொல்வார்கள். நாங்கள் படிக்கக் கற்றுக் கொண்ட காலத்தில், சிறுவயதில் வாசிப்பதற்காக அவர்கள் எங்களுக்குக் கொடுத்த முதல் புத்தகம் ஹஸ்ரத் ஸையித்னா பிலால் மற்றும் ஷஹ்ஸாதா அப்துல் லதீஃப் ஸாஹிப் பற்றிய புத்தகமாகும்.'

மகன் மேலும் கூறுகிறார்: சந்தாக்கள் விஷயத்தில் மிகுந்த கவலை இருந்தது; ஆண்டின் ஆரம்பத்திலேயே அவை செலுத்தப்பட்டுவிட வேண்டும், சந்தா செலுத்துவதில் தாமதம் ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று நினைப்பார்கள். அவர்கள் என்னிடம்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 22- 29 OCT 2026 Issue No. 43 & 44

ACT. MANAGER
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கூறும்போது, 'ஒருமுறை நான் வாக்குறுதி அளித்தேன்; ஆனால் பணவசதி இருக்கவில்லை; அது எனக்குப் பெரும் கவலையாக இருந்தது. அல்லாஹ்விடம் துஆ செய்தேன்; அல்லாஹ் விரைவில் அதற்கான வசதியை ஏற்படுத்தித் தந்தான்' என்று கூறினார்கள். 'சந்தாக்களைத் தவறாமல் செலுத்துங்கள்' என்று எங்களுக்கும் அறிவுறுத்துவார்கள்.

அவர்களுக்கு உண்மையான கனவுகள் வருவதுண்டு. பிறரின் இரகசியங்களை எப்போதும் காப்பார்கள்; மற்றவர்களின் ரகசியங்களை எப்போதும் பாதுகாப்பார்கள். பிறர் குறைகளை மறைக்கும் குணம் அவர்களிடம் மிகுதியாக இருந்தது. அவர்களின் உண்மையான கனவுகளில் ஒன்று, எனது பெயரான 'மஹ்மூத் இஃப்திகார்' என்பதை அவர்கள் கனவில் கண்டார்கள்; ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கனவில் இப்பெயரை அவர்களுக்கு வழங்கினார்கள்; அதன் பிறகே எனக்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டது.

தமது வாழ்நாளில் பல மிகுந்த சிரமங்களைக் கண்டுள்ளார்கள்; ஆனால் ஒருபோதும் எந்தவொரு துன்பத்தையும் வெளிப்படுத்தியதில்லை. எப்போதும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவராகவே இருந்தார்கள். தமது இறுதி நோயின் போது கூட எங்களைப் பற்றியே அக்கறை கொண்டார்கள். நான் மருத்துவமனையிலோ அல்லது வீட்டிலோ அவருக்காக விழித்திருந்தால், 'நீ போய் தூங்கு' என்று கூறுவார்கள். நான் தூங்கிக் கொண்டிருக்கும் போது என்னை எழுப்ப மாட்டார்; நான் விழித்தெழும் வரை காத்திருந்து, அதன் பிறகே ஏதேனும் வேலைகளைக் கூறுவார்.

பிறகு அவர் கூறுகிறார்: தமது மகிழ்ச்சிகளைத் தியாகம் செய்து, பிறரின் மகிழ்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பார். வாழ்வை அர்ப்பணித்தவர்களை பெரிதும் மதிப்பார்.'

அதேபோன்று, மர்ஹூமாவின் இளைய மகனான ஹாஷிர் அஹ்மதும் மூத்த சகோதரர் குறிப்பிட்ட அதே நற்பண்புகளையே நினைவு கூர்ந்துள்ளார். அவர் கூறுகிறார்: 'பாட்டியைப் போலவே தாயாரும் தாராள மனப்பான்மை கொண்டவராக இருந்தார். ஏழைகளுக்காகப் பணத்தைச் செலவிடுவதில் ஒருபோதும் தயக்கம் காட்டியதில்லை. 'நீ முறைப்படி வக்ஃப் செய்யவில்லை என்றாலும் மார்க்கத்திற்குச் தொண்டு செய்' என்று என்னிடம் கூறுவார். நான் ஜெர்மனியில் தொண்டு செய்து வருவதாகக் கூறிய போது, அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.'

அல்லாஹ் மர்ஹூமாவிடம் மன்னிப்பும் கருணையும் காட்டுவானாக! அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக!

மூன்றாவது ஜனாஸா, ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஓய்வுபெற்ற பணியாளரான மதிப்பிற்குரிய ரஷீத் அஹ்மத் அயாஸ் ஸாஹிப் அவர்களைப் பற்றியதாகும். இவர்கள் கடந்த நாட்களில் தமது 86-வது வயதில் மரணமடைந்தார்கள். **இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.**

அல்லாஹ்வின் அருளால் இவர்கள் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களுள் மனைவியைத் தவிர, இரண்டு மகள்களும் நான்கு மகன்களும் உள்ளனர். அவர்களின் ஒரு மகன் தாஹிர் அகமத் ஸஃபர் ஸாஹிப், ஜமாஅத்தின் முரப்பியாகவும், கானாவிலுள்ள ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனின் துணை முதல்வராகவும் பணியாற்றி வருகிறார். தமது கடமைகளின் காரணமாகவும் செயல் களத்தில் உள்ளதன் காரணமாகவும், அவர்களால் தனது தந்தையின் ஜனாஸாவில் கலந்து கொள்ள இயலவில்லை. அல்லாஹ் அவர்களுக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக!

அந்த முரப்பி சாஹிப் கூறுகிறார்: 'எங்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் நுழையக் காரணமாக இருந்தவர், அப்ஸார் சூரைச் சேர்ந்த எங்களது கொள்ளுப்பாட்டனார் மதிப்பிற்குரிய மியான் அல்லாஹ் தத்தா சாஹிப் ஆவார்.

அதன் பிறகு அவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் பரவியது. ரஷீத் அயாஸ் சாஹிப் அவர்கள் ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பல்வேறு துறைகளில் தொண்டாற்றியுள்ளார்கள்; ஓய்வு பெற்ற பிறகும் பிற பணிகளையும் செய்து வந்தார்கள். இவர்கள் முறைப்படி நஃபில் தொழுகைகளை நிறைவேற்றுபவராகவும், தொழுகைகளைப் பேணுபவராகவும் இருந்தார்கள். அதிகளவில் இறைவனை நினைவு கூருபவராகவும், மிகுதியாக துஆக்கள் செய்பவராகவும் இருந்தார்கள். கிலாஃபத்தின் மீது ஆழமான பற்றுக் கொண்ட மனிதராகத் திகழ்ந்தார். திருக்குர்ஆனைத் தவறாமல் தினமும் தஹஜ்ஜுத் செய்பவர். சந்தாக்களை முறையாகச் செலுத்துவதோடு, அதற்கான முழுமையான பதிவேட்டையும் வைத்திருந்தார். வசிய்யத் செய்தவராக இருந்ததால், தமது வாழ்நாளிலேயே சொத்துக்கான பங்கையும் செலுத்தி முடித்துவிட்டார்.

அல்லாஹ் அவர்களிடம் மன்னிப்பும், கருணையும் காட்டுவானாக!

தமிழாக்கம்
முரப்பி A.P.A. தாரிக் அஹ்மது

* * * * * * * * * * * * *

2-ம் பக்கத் தொடர்ச்சி (தலையங்கம்).....

ஆஃப் ரிலிஜியன்ஸ்' பத்திரிகை தற்போது தனது 122 வது ஆண்டில் நுழைந்து விட்டது. இது பல்வேறு தளங்களின் மூலம் ஆங்கிலம், ஜெர்மன், ஸ்பானிஷ் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் கோடிக்கணக்கான நபர்கள் வரை தூதுச் செய்தியை எட்ட வைத்துக் கொண்டிருக்கிறது. நடப்பு ஆண்டு அதன் டிஜிட்டல் பதிப்பும் வெளியிடப்பட்டது.

அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் தற்போது அல்லாஹ்வின் அருளால் மிகப் பெரிய அளவில் வெளியாகிக் கொண்டிருக்கிறது.

எம்.டி.ஏ இன்டர்நேஷனல் 16 துறைகளைக் கொண்டுள்ளது. 568 ஊழியர்கள் இரவு பகலாக சேவை செய்து வருகின்றனர். இந்த ஆண்டுடன் எம்.டி.ஏ ஆஃப்ரிக்கா தொடங்கப்பட்டு பத்தாண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்தப் பத்தாண்டுகளில் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு, அவற்றின் மூலம் ஆயிரக்கணக்கானோர் இஸ்லாம் அஹ்மதிய்யத்தில் இணைந்தனர். ஆஃப்ரிக்காவில் ஜமாஅத்தின் சொந்த வானொலி நிலையங்களின் எண்ணிக்கை 26 ஆகும்.

வாய்ஸ் ஆஃப் இஸ்லாம் ரேடியேட் யூ.கேவிற்கும் பத்தாண்டுகள் நிறைவடைந்து விட்டன. தற்போது இந்த வானொலியின் ஒளிபரப்பு பிரிட்டனின் 13 நகரங்களில் நேரலையாக ஒலிபரப்பப்பட்டு வருகிறது. மேலும் ஆன்லைன் ஒலிபரப்பை உலகெங்கும் கேட்கலாம்.

அல்-இஸ்லாம் இணையதளத்தில் ஹதீஸ் தேடுபொறி மற்றும் செயலி துவங்கப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் தேடுபொறியிலும் மேம்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அல்-வஸிய்யத் மற்றும் 'Ten conditions of Bai'at' ஆகியவற்றில் கூடுதல் தேர்வுகள் சேர்க்கப்பட்டுள்ளன. 36 புதிய ஆங்கில இ-புத்தகங்கள் சேர்க்கப்பட்டதன் மூலம் மொத்த எண்ணிக்கை 260 ஆகிவிட்டது. ஏறக்குறைய அல்-இஸ்லாத்தின் குழு முழுவதுமே தன்னார்வலர்களைக் கொண்டுள்ளது. மேலும் மிகவும் நன்றாகச் செயல்பட்டு வருகிறது.

இன்டர்நேஷனல் அசோசியேஷன் ஆஃப் அஹ்மதிய்யா ஆர்க்கிடெக்ட்ஸ் அண்ட் இன்ஜினியர்ஸ் (IAAAE) இந்த ஆண்டு 65 குடிநீர் குழாய்களை அமைத்துள்ளது, இதன் மூலம் 2 லட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். அதேபோல் மாதிரி கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சோலார் தகடுகள் நிறுவப்பட்டுள்ளன.

மஜ்லிஸ் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் ஆஃப்ரிக்காவின் 54 நாடுகளில் 41 கிளினிக்குகள் மற்றும் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை வசதிகள் வழங்கப்பட்டன. ஆஃப்ரிக்காவின் 13 நாடுகளில் நமது 620 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளும் 80 மேல்நிலைப் பள்ளிகளும் கல்விச் சேவைகளை நிறைவேற்றி வருகின்றன. மனிதம் முதலில் தன்னார்வத் தொண்டு அமைப்பிற்கு 25 லட்சத்திற்கும் அதிகமான நபர்களுக்கு ஒட்டுமொத்தமாக சேவை செய்யும் நற்பேறு கிடைத்துள்ளது. நடப்பு ஆண்டின் போது 95 நாடுகளில் மொத்தம் 54,485 புதிய அஹ்மதிகளுடன் தொடர்பு மீட்டமைக்கப்பட்டது. இந்த ஆண்டு புதிய பைஅத்துகளின் எண்ணிக்கை 2,67,596 ஆகும். அல்ஹம்துலில்லாஹ்!

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * *

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad